தர்க்கபாஷை

இந்நூல்

18005

வல்லைவயம்பதி

குமாரசாமிமுதலியார் கதிரைவேற்பிள்ளை

நீதிபதி

வடநூலோடாராய்ச்சிசெய்து

பரிசோதித் தச்சிடுவித்தபடி

அவர் குமாரர்

அத்துவக்காத்து

பாலசிங்கம் அவர்கள்

அச்சிடுவித்தனர்

மூன்றாம் பதிப்பு.

JAFFNA:

THE "YOUNG MEN OF JAFFNA" PRESS.

1904.

		பக்கம்.
௩	தேயு.	௪௪—௪௫
௪	வாயு.	௪௫—௪௬
௫	ஆகாயம்	௪௮ ௪௯
	காலம்.	௪௯—௫௦
௭	திக்கு	௫௦
௮	ஆன்மா	௫௦
௯	மனம்.	௫௦ ௫௧
குணம்.		௫௧
௧	உருவம்.	௫௧
௨	இரசம்.	௫௧ ௫௨
௩	கந்தம்.	௫௨
௪	பரிசம்.	௫௨
௫	சங்கியை.	௫௨—௫௩
௬	பரிமாணம்	௫௩
௭	வேறுகல்	௫௩
௮	சையோகம்	௫௩ ௫௪
௯	விபாகம்	௫௪
௧௦	பரத்துவம்.	௫௪
௧௧	அபரத்துவம்	௫௪—௫௫
௧௨	குருத்துவம்	௫௫
௧௩	திரவத்துவம்.	௫௫
௧௪	சிநேகம்	௫
௧௫	சத்தம்	௫ —௫௮
௧௬	புத்தி	௫௮
௧௭	சுகம்	௫௮
௧௮	துக்கம்	௫௮
௧௯	இராகம்	௫௮

பக்கம்

௨௦ த்வேஷம் ௫௮
௨௧ பிரயத்நம் ... ௫௮
௨௨ தருமம். ... ௫௮
௨௩ அதருமம்.... ... ௫௮
௨௪ சம்ஸ்காரம் .. ௫௯
௧ வேகம் .. ..
௨ பாவநை ...
௩ ஸ்திதஸ்தாபகம் ...
௩ கருமம் ... ௫
௧ எழுதல் ... ௫
௨ விழுதல். ... ௫௯ — ௦
௩ முடக்கல் . ௬௦
௪ நீட்டல் .. ௬௦
௫ நடத்தல் .. ௬௦
௪ சாமாநியம் ௬௦
௧ பரம் ௬௦
௨ அபரம் ௦ ௬௧
௫ விசேடம். ௬௧
௬ சமவாயம் ௬௧ ௬௨
அபாவம் ௬௨ ௬௩
5 புத்தி ௬௩
௧ அநுபவம் ௬௩
௧ மெய்மை ....
௨ பொய்மை..... ....
௨ நினைவு ....
௧ மெய்மை
௨ பொய்மை ....

பக்கம்.

6 மதம். .... கூசு
7 பிரவிருத்தி. .... கூசு
க தருமம். .... கூசு
உ அதருமம். .... கூசு
8 தோடம் .... கூசு
க காமம். .. .. கூசு
உ வெகுளி..... .... கூசு
ந மயக்கம் .... கூசு
9 பிரேத்தியபாவம். .... கூசு
10 பலம். ... ... கூரு
11 துக்கம். கூரு
12 அபவர்க்கம். .... கூரு கூகூ
ங வது சமுசயம். கூகூ கூஎ
ச வது பிரயோசநம். கூஎ
ரு வது திட்டாந்தம் கூஎ
1 ஒத்ததருமதிட்டாந்தம்.... கூஎ
2 வைதருமிதிட்டாந்தம் கூஎ
சு வது சித்தாந்தம். கூஎ
1 சர்வதந்திரம் .... கூஎ
2 பிரதிதந்திரம். .... கூஎ
3 அதிகரணம் .... கூஎ
4 உடம்பாடு. .... கூஎ கூஅ
எ வது அவயவம். கூஅ
1 பிரதிஞ்ஞை. .... கூஅ
2 ஏது .... கூஅ

		பக்கம்
3 உதாரணம்		கூஅ
4 உபநயம்.		கூஅ
5 நிகமநம்.	....	கூஅ
அவது தருக்கம்.	கூஅ	கூ
கூவது நிர்ணயம்.		கூகூ
௦வது வாதம்.		கூகூ
கவது சற்பம்.	கூகூ	எ௦
கஉவது வித ்டை		எ௦
கஙவது ஏத்துவாபாசம்.		எ௦
1 அசித்தம்.	எ௦	எக
க ஆசிரயாசித்தம் ...	எக	எஉ
உ சொரூபாசித்தம்		எஉ
க விசேடணாசித்தம் ..	எஉ	எங
உ விசேடியாசித்தம்		எங
ங அசமர்த்தவிசே ணாசித்தம்		எங
ச அசமர்த்தவிசேடியாசித்தம்.	எங-	எச
ங வியாப்பியத்துவாசித்தம்.		எ
க சாத்தியத்துடனேயுடனிக ழ்ச்சியில்லாதது ..		எச
உ சோபாதி சம்பந்தி	எச	எரு
1 விருத்தம்	..எரு	எகூ
2 அநைகாந்திகம்		எகூ
க சாதாரணஅ நகாந்தி ம்		
உ அசாதாரணஅநை ாந்திகம்		
3 பிரகரணசமம்	....	எஎ
4 காலாத்தியயாபதிட்டம்	எஎ	எஅ

பக்கம்.

௪ வது சலம். ௭௯

௧௫ வது சாதி. ௭௯

1 உற்கருஷம் .. ..

௨ அபகருஷம் ..

௧௬ வது நிக்கிரகஸ்தானம். ௮௦

தர்க்கபாஷை

நியாயநூற்பிரவேசஞ் சுருங்கிய கேள்வியினா லடைதலை மடியனாயும் வாஞ்சிக்கின்ற பாலனைவன் அவனுக்கு யுத்திபந்தித தர்க்கபாஷையை, யான் சுருக்கி விளக்குகின்றேன்.

பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசநம், திட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தருக்கம், நிண்ணயம், வாதம், சற்பம், விதண்டை, ஏத்துவாபாசம், சலம், சாதி, நிக்கிரகத்தானங்களது தத்துவஞானத்தால் உயர்சிறப்படைப.*

---

* உயர்சிறப்படைதலென்பது வீடடைதல் பிரமாணாதிகளுடைய மெய்ம்மையறிவினால் மித்தியாஞானமாகிய பொய்ம்மையறிவகலும்-அஃதகல, அதுகாரணமாகப் பிறக்குங் காமவெகுளி மயக்கங்களாகிய தோஷங்களும்-அஃதகல, அதன் காரியமாகப் பிறக்கும் புண்ணியபாவங்களாகிய பிரவிருத்திகளும்-அஃதகல, அதன் காரியமாகிய பிறப்புகளும் அஃதகலுங்கால் அதனோடுநிகழுந் துக்கங்களும்-அத் துக்கத்தினது ஒழிவே நிச்சிரேயசமென்றும் அபவர்க்கமென்றுஞ்சொல்லப்படுகிற மோட்சம் என்னுங் கௌதமர் கருத்தைச் சார்ந்தவராய் நமது தார்க்கிகர் பிரமாணாதி பதினாறு பதார்த்தங்கள துண்மையறிவால்வீடடைதலுளதாமென்று கூறினரெனக்கொள்க தர்க்கம் வழுவறக் கற்று, அதன் பிரமாணங்களைத் துணைக்கொள்வானொருவன், ஆராயுங்கால் மெய்யிதுபொய்யிதுவென்றறி

உத்தே°
இலக்கண°
பரீட்சை.

இது நியாயத்தினது முதற்சூத்திரம். இதன்பொருள், பிரமாணமுதற் பதினாறுபொருள துண்மையறிவால் வீடடைதலுளதாமென்பது

எவ்வளவும் பிரமாணமுதலியவற்றி னுத்தேச இலக்கண பரீட்சை பண்ணப்படாது, அவ்வளவு மவற்றினுண்மையறி வுண்டாகாது' எ ஙனம்? பாஷியகாரர் கூறினார் அங்ஙனம் இந்நூலது பிரவிருத்தி உத்தேசமும், இலக்கணமும், பரீட்சையுமென மூன்றுவகைத்து

-த்தேசமாவது பெயர்மாத்திரையாற் பொருளைச் சொல்வது அதுவு மிச்சூத்திரத்தானே பெறப்படும்

இலக்கணமாவது சிறப்பியல்பு எங்ஙனமெனின், ஆவிற்குத் தாடி முதலிய உடைமை.

இலக்ஷியத்திற் இலக்கணம் பொருந்துமோ பொருந்தாதோவென் றாராய்தல் பரீட்சை

ஆதலின் இவ்விலக்கண பரீட்சைகள் பிரமா

வான் கடவுள் அருளியவேதம் யாது, கையர் இயற்றியநூல் யாதெனறறிவான் ஒன்றேனும்பொய்ம்மைமொழிபுகலு மாகமமானது மற்றெப்பரிசினுஞ் சாமர்த்தியகாரியமாயினுந் திவ்விய யோக்கியமுடையத ' று, மனுடசிருட்டியாதல் வேண்டுமென்றறிவான் இவ்வகைபுரிதலறம் இவ்வகைபுரிதல் மறம் என்றறிவான்; ஆதலால், தர்க்கவித்தியை வீட்டைதற்கு வழியாகுமென ஒருபடித்தா எரும் கொள்ளற்பாற்று

ஞாதிகளுடைய உண்மையறிவின்பொருட்டவசியம் வேண்டின. அவற்றுள் முதற்கணுத்தேசித்த பி ரமாணத்திற்கிலக்கண முறையே கூறப்படும்.

க பிரமாணம்.

பிரமைக்குக் கரணம் பிரமாணம் இதிற் பிரமா ண மிலக்கியம், பிரமாகரணத்தன்மை யிலக்கணம்.

அற்றேல், பிரமாணம் பிரமைக்குக் கரணமாயி னதற்குப் பலங் கூறல்வேண்டும்; கரணத்திற்குப் பலமுடைமை நியமமாதலின் அஃதொக்கும்; அத ற்குப் பிரமையே பலம் பலமாவது சாதித்தல் துணி த்தற் கருவியாகிய நவியத்திற்குத் துணித்தலே பலம்

பிரமை. பிரமாணத்திற்குக் கரணமாகக் கூறப்ப ட்ட பிரமையாவது யாது? யதார்த்த அநுபவம் பிரமை; யதார்த்தமென்றது அயதார்த்த மாகிய ஐயத்திரிவு தருக்க உணர்வுகட்கு விலக்கு. அநுபவம் என்றது*ஸ்மிருதிக்கு விலக்கு. அது ஸ்மிருதிக்கு வேறாகிய உணர்வு

ரம. கரணமாவதுயாது? சாதகதமங் கரணம் உயர்ந்த சாதகஞ்சாதகதமம் உயர்ந்த கா ரணமென்பதேயிதன்பொருள். சாதகங் காரணம் என்பன ஒருபொருட் சொற்கள்.

ரண . ாரணமாவதியாதெனிற் கூறுதும் நிய தமாய்ப் பிறிதொன்றற் றதலின்றிக் காரி யத்திற்கு முன்னிற்றலுடையது யாது அது கார ணம்; ஆடைக்கு நூறுடா முதலியன போல்வ ஆ

*ஸ்மிருதி-நினைவு

டை தோன்றுழித் தன்னியல்பின்வந்த கழுதை முதலியவற்றிற்கு முன்னிற்றலுண்டேயாயினும், அது நியமமன்று. நாலுருவிற்கு நியதமாய் முன்னிற்றலுண்டேயெனின், அது பிறிதொன்றற்காகும்; ஆடையுருத் தோற்றத்தமைதலின். ஆடையைக்குறித்துங் காரணமெனிற் றபனை பெருகும். ஆதலிற் பிறிதொன்றற்காகாமையாய் நியதமாய் முன்னிற்பதன்றன்மை காரணத்தன்மை. பிறிதொன்றற்காகாது நியதமாய்ப் பின்னிற்பதன் றன்மை காரியத்தன்மை.

ஒருவன், காரியத்தாலே தொடரப்பட்ட அந்நுவய வியதிரேகி காரணமென்றான். அது பொருந்தாது; நித்தியவிபுவாய வான் முதலியவற்றிற்குக் காலத்தானு மிடத்தானும் வியதிரேகமின்மையிற் காரணமன்மைவரவேண்டுதலின்.

காரணமுஞ் சமவாயி, அசமவா
மவாயி ர ı யி, நிமித்தமெ னுங் கூறுபாட்
டான்மூவகைப்படும். அவற்றுள்,
எதன்கட் சமவேதித்துக் காரியந்தோன்றும், அது சமவாயிகாரணம் எங்ஙனம்? நூல்களாடைக்குச் சமவாயிகாரணம் நூலின்கண்ணே யாடைசமவேதித்துத் தோன்றும் நாடாமுதலியவற்றினில்லை.

அற்றாயின், ஆடைக்கு நூலோடும் நாடாமுதலியவற்றோடுஞ் சம்பந்தமுளதாக, நூலின்கண்ணே யாடை சமவேதித்துத் தோன்றல்—நாடா முதலியவற்றின்கணில்லையென்பதெங்ஙனம்? அதொக்கும்; அச்சம்பந்தம், சையோகமுஞ் சமவாயமு

மென இருவகைப்படும். அவற்றுள், நீக்கமின்றியி
ருப்பவற்றின் சம்பந்தம், சமவாயம்; ஏனையவற்றது
சையோகமே. நீக்கமின்றியிருப்பனயாவை? எவற்று
ளொன்று நசியாததாய் மற்றொன்றைப் பற்றியே
நிற்கும், அவை நீக்கமின்றியிருப்பன. எங்ஙனம்?
அவயவாவயவிகள், குணகுணிகள், வினைவினையுது-
ள், சாதிவியத்திகள், விசேடநித்தியத் திரவியங்க
ளென்பனவே. அவயவி முதலியன முறையே கெ
டாதனவாய அவயவமுதலியவற்றைப் பற்றியே
நிற்கும்; கெடுமவத்தையிற் பற்றாமையே நிற்கும்
எங்ஙனம்? நூலதுகேட்டின் ஆடையும் *ஆசிரயத்
ததுகேட்டிற் குலையும். கெடுசற்றன்மையாவது
கெடுதற்காரணக் கூட்டங்கூடுதல். நூலாடைகளு
ம் அவயவாவயவிகளாதலின், அவற்றது சம்பந்தஞ்
சமவாயம்; நீக்கமின்றியிருத்தலின். நாடா ஆடை
கட்காயிற் சமவாயமின்று; நீக்கமின்றியிருத்தலி
ன்மையின். நாடா ஆடையைப்பற்றி நிற்றலும் இ
ன்று. ஆடை நாடாவைபபற்றி நிற்றலும் இன்று.
ஆதலின் அவற்றது சம்பந்தஞ் சையோகமே.
ஆதலின், இங்ஙன மாடை நூலிற் சமவேதம். எத
னகட்சமவேதித்துக் காரியந்தோன்றும், அது சம
வாயிகாரணம், ஆதலின், நூல்களே யாடைக்குச் ச
மவாயிகாரணம்; நாடாமுதலியன அல்ல ஆடையுந்
தற்புணருருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரண
ம். இங்ஙன மட்பிண்ட முங் குடத்திற்குச் சமவாயி
காரணம். குடமுந் தற்புணருருவமுதலியவற்றிற்
குச் சமவாயிகாரணம்.

அற்றாயின், எப்பொழுது குடமுதலியன தோ றும் அப்பொழுதே தற்புணருருவமுதலியனவுந் தோன்றும் ஆதலின் ஒருகாலத்திற் றோன்றின ஆதலிற் குணகுணிகட் கிடவலக்கோடுபோலக் காரிய காரணத்தன்மையில்லை முற்பிற்பாடின் மையின் ஆதலிற் குடந் தற்புணருருவமுதலியவ ற்றிற்குச் சமவாயிகாரணமன்று சமவாயிகாரண ங் காரணவிசேடமாதலின் எனிற் கூறுதும்.

குணகுணிகட் கொருகாலைத் தோற்றமின்று. ஆ யின், திரவியங் குணமிலியாயே முற்றோன்றும்; பின் அதிற் சமவேதித்துக் குணங்கடோன்றும். ஒருகா லைத்தோற்றமாயிற் குணகுணிகட்கு ஒரு காரணக் கூட்டத்தனவாதலில் வேறுபாடில்லாதல் வேண்டு ம்;காரியவேறுபாடு காரணவேறுபாட்டி னியதமாத லின் ஆதலின் முற்கணத்திற் குணமிலியேயாய குட ங் குணங்கட்கு முன்னிற்பது. திரவியங் குணங்க ட்குச் சமவாயிகாரணமாம் அப்பொழுது காரண வேறுபாடுமுண்டு. குடங் குடத்தைக் குறித்துக் காரணமன்மை; ஒன்றற்கே முற்பிற்பாடின் மையின் குடந் தானே தன்னைக்குறித்து முன்னிற்பதும் பி னிற்பதுமில்லை. தன் குணங்களைக்குறித்து முன் னிற்றலின், திரவியங் குணங்கட்குச் சமவாயிகார ணமாம்

அற்றாயின், இங்ஙனமாயின் குட முற்கணத்திற் ட்புலமின்மையாதல்வேண்டும் அருவத்திரவியத் துவமாதலில்; காற்றுப்போல எத்திரவியம் பரிதா உற்பூதவுருவமுடையது, அத்திரவியங் ட்புலப்ப டுவது: திரவியமன்மையுமாதல்வேண்டும்; குணத்

திற்கிடனுதற்றன்மையின்மையின் குணத்திற்கிட னுவது திரவியமென்பது திரவிய இலக்கணம் அஃதொக்கும்; மிகவு நுண்ணிய கு ம் முதற்கணத் திற் கட்புலனாற் கிரகிக்கப்படாதாயி r அப்பொழு து நமக்கிடையூ றியாது? ஆதலின் முன்னர்க் கு ணமிலியாயே குடந் தோன்றுமென்னும் இது து ணிவு. இரண்டு முதலிய கணங்களிற் கட்புலனாற் ரகிக்கப்படும். முற்கணத்திற் குணத்திற்கிடனுதற் றன்மையின்மையிற்றிரவியமன்மையாதலில்லை; சம வாயிகாரணந் திரவியமென்னுந் திரவிய லக்கணப் பொரு த்தத்தால் யோக்யதையாற் குணத்திற்கிட னுமாதலின் *

* நமது தார்க்கிகர் கடுந் திடரினு நுழைந்து உ ண்மறைந்துகிடக்குந் திரவியங்களைக் கவருகிற நிபு ணமுந் தீ சணமுமுடையவரேனுஞ் சிறுபான் ம வழுவுவது நூதநமன்று முன்னர்க் குணமிலியா யே திரவியந் தோன்றும், அதினின்று குணந்தோ றுமென்னுமிது நமக்குத் துணிவன்று இவ்வா சிரியர் தாமே சொல்லுகிறபடி திரவியமென்பது குணத்திற்கிடனுதலென்னு மிலக்கணமுடையது, குணத்திற்கிடனுவதாந் தன் ம முற்கணத்தினில தாயின் அக்கணத்தில் அதைத் திரவியமென்று கொள்வதெங்ஙன்?

திரவியமென்ப துளதாயதொன்று. உளதென் று சொல்லற்பாலது யாதுயாது, அதுஅது யாதே னுமோர் தன்மையினுளதாகவேண்டும் த மையி னறியும் திரவியமுளதாமென்பது அநர்த்தக வாக் கியமாம் எங்ஙனமெனின் திரவியமீண்டுளதென வே, அத்திரவியம் பெரியதேனுஞ் சிறியதேனும்,

அசமவாயி காரணம் யாது சமவாயிகாரணத் தணுகியிருப் பதுந் துணிந்த காரணத்தன்மை யுடை யதுமாயிருப்பது, அஃதசமவாயிகாரண மென்று கூறப்படும். எங்ஙனம்? ஆடைக்கு நூலி ழைய சமவாயிகாரணம்; நூலிழையாகிய குணமா டைச் சமவாயிகாரணமும் குணியுமாகிய நூல்களி லே சமவேதித்திருத்தலின், சமவாயிகாரணத்தணி த்தாயிருத்தலின் பிறிதொன்றிற்காகாமையு நியதி யுமாகிய முன்னிற்றற்றன்மையால் ஆடையைக்குறி த்துங் காரணமாதலின். இங்ஙனம், நூலுருவமு மாடையையடைந்த உருவிற் கசமவாயிகாரணம்.

அற்றாயின், ஆடையுருவிற் காடை சமவாயிகார ணம்; ஆதலின், தன்னையடைந்தேயிருக்கின்ற ஒரு தருமத்திற் காடையுருவைக்குறித் தசமவாயிகார ணத்தன்மை கூறந்தரும்; சமவாயிகாரணத்தணித் தாயிருத்தலின்: நூலுருவிற்குத் தகுதியன்று, அத ற்குச் சமவாயிகாரணத் தணித்தாயிருத்த லின்மை யின்; இங்ஙனமன்று; சமவாயிகாரணத்தின் சமவா

ஆனதாக, அணுத்துணையேனும் மேருத்துணையே னும் ஓரிடத்தைத்தக்கதுவவேண்டுமே அப்பொருள் கண்ணுக்குத் தோன்றுவதாயின், உருவத்தன்மை யுடையதாயும், தோன்றாதாயின் அருவத்தன்மையு டையதாயும் இருக்கவேண்டுமே; இவைபோல்வன வற்றால் திரவியமுளதென்றறியுங்கால் அஃது இ ன்ன இன்ன பரிசாய் இருக்கின்றதென்றறியும் அ றிவுவிடயமே தன்மை. இத்தன்மையே குணம் ஆதலால் குணமென்பது, தானே திரவியமாகாது, தான் திரவியத்தினின்று பிறிதொன்றாகாதாய்த்

யிகாரணத் தனித்தாயிருத்தலும் பரம்பரையாய்ச் சமவாயிகாரணத் தனித்தாயிருத்தலின்
பாதொன்று சமவாயிகாரணமு

நிமித்தகாரணம். ம் அசமவாயிகாரணமுமன்றாய் மற்றுங் காரணமாம், அது நிமித்தகாரணமென்று கூறப்படும். எங்ஙனம்? தண்டாமுதலியன ஆடைக்கு நிமித்தகாரணம்.

இக் காரணங்கண்மூன்றும் உளபொருளுக்கே. இல்பொருட்காயின், நிமித்தகாரணமாத்திரம்; அதற்கொரிடத்துஞ் சமவாயமின்மையின், சமவாய மு

கிரவியத்தைக் கிரகிக்கின்றவரது உள்ளத்தே யுத்தியினாற்பகுக்கப்பட்டுப் பிரக்குபயோகமாகற்பொருட்டுப் பெயர்பிறந்து கொடுக்கப்பட்டுக் கிடக்கும் மனோசி ட்டியென்றுகொள்க.

குணமென்பதை மனோசிருட்டியாகக் கொண்டு, மரத்தின்கண்ணே ஒ ந்த குணத்திற்குத் திரவியத்தின்கண்ணே சமவாயந் தோன்றிற்று. ஆதலால் திரவியந் தோன்றுங்காற் குணந் தோன்றியதில்லையென்று சொல்லின் ஒருவாறு பொருந்தும். எங்ஙனமெனின் குடமென்பது தோன்றியபின், அதினாலங் குடத்தினின்றுமெழுந்து கட்பொறியினிகழ்ந்த கதிர்களாற் கிரகிக்கப்படுவதாதலின் அக்கதிர்ச் சொரூபமாகிய உருவமே குடத்தின் குணமாகக் காண்கின்றவனுடைய உள்ளத்திற் கொளக் ப்படுவதால், அக்குணம் குடத்தின் சமவேதமென்றும் அதற்குக் குடஞ் சமவாயமென்றும் குடந் தோன்றியபோது குணந்தோன்றவில்லையென்றுஞ் சொல்வதனையும். ஆயினும், இவ்வாசிரியரிக்கருத்துப்பற்றிக்கூறினாரென்று நாஞ்சொல்லவல்லோம்.

எபொருளிரண்டின் றருடமாதலின், இக் காரணங்
கள் மூன்றினுள் யாதாயினு மெவ்வாற்றானு முய
ருமாயின், அதுவே கரணம்.

ஆதலின் பிரமைக்குக்கரணம் பிரமாணமென்னு
மிவ்விலக்கணந் துணியப்படும்.

உணரப்படாத பொருளின துணர்வு பிரமா
மென்பது பிரமாண இலக்கணமெனின் அஃதன்
று; ஒரு குடத்தின்கண்ணே குடமிது குடமிதுவெ
ன்றுணரப்பட்டதை யுணருந் தாரைவொழுணர்வு
கட் கப்பிராமாண்யம் வரவேண்டுதலின். வேறுவே
றாகிய கணவிசேடத்தோடு கூடிய பொருட்கவர்ச்சி
யா னுணரப்படாத பொருளின துணர்தற்றன்மை
யுண்டென்பதன்று; காட்சியானுண்ணிய கால வே
றுபாட்டினது தெரியாமையின். வேறுபாடு தெரி
யின் கிரியைமுதற் சையோகமீறாய நான்கிற்கும் ஒ
ருமை யபிமான மின்றுதல் வேண்டும். பிரமாதாவு
ப்பிரமேய முதலிய பல காரணங்கள் பிரமைக்குள.
இவையெல்லாங் கரணமோ அல்லதல்லவோ கூறு
தும். பிரமாதாவும் பிரமேயமு மிருப்பினும் பிர
மை பிறவாமையினானும் இந்திரியார்த்த சையோ
காதி யுண்டாயின் விரைவிற் பிரமை பிறத்தலினா
னும், இந்திரியார்த்த சையோகாதியே கரணம். சா
தகத்தன்மை விசேஷமின்றாயினும் இவ்வுயர்ச்சியா
னே யிதற்குப் பிரமாதா முதலியவற்றினின்று மதி
சயமாதலின், உயர்ந்த காரணங் கரணமென்று கூற
ப்பட்டது இந்திரியார்த்த சையோகாதியே பிர
மைக்குக் கரணமாதலிற் பிரமாணம்; பிரமாதா மு
தலியன அல்ல, அப்பிரமாணங்களைந்து.

அங்ஙன நியாயதந்திரம் பிரத்தியட்ச அநுமாந உபமாந சப்தங்கள் பிரமாணங்கள்.

1. பிரத்தியட்சம்.

காட்சியாவது யாது? சாட்சாற்காரிப் பிரமைக்குக் கரணம் பிரத்தியட்சம். யாதிந்திரியத்தாற் றோன்றும், அது, சாட்சாற்காரிப்பிரமை. அஃது சவிகற்ப நிருவிகற்பக் கூறுபாட்டால், இருவகைப்படும். அதற்குக் கரணமூவகை; ஓரிடத்திந்திரியம், ஓரிடத்துப் பொருளிந்திரியக் கூட்டம், ஓரிடத்து ஞாநம்.

எவ்விடத்திந்திரியங் கரணம்? எப்போது நிருவிகற்ப வுருவப் பிரமை பலமாம், அப்போதிந்திரியங் கரணம். அவ்வாறே உயிர் மநத்தோடு கூடும்; மநமிந்திரியத்தோடு; இந்திரியம் பொருளோடு; இந்திரியங்கள் கடைந்ததை விளக்குந்தன்மை நியமமாதலின். ஆதலிற் பொருளோடு கூடிய இந்திரியத்தாற் பெயர் சாதி முதலியையில்லாத பொருண்மாத்திர மகப்படுக்கு நிருவிகற்ப ஞாநந் தோன்றும். அந்த ஞாநத்திற் கிந்திரியங் கரணம் துணித்தற்கு நவியம் போல; இந்திரியார்த்தக் கூட்டமவாந்தர வியாபாரம். துணித்தற்க நவியாகிய நவியத்திற்கு மரத்தோடு கூட்டம் போல; நிருவிகற்ப ஞாநம் பலம்; நவியத்திற்குத் துணித்தல் போல.

எவ்விடத்துப் பொருளிந்திரியக் கூட்டங் கரணம்? எப்போது, நிருவிகற்பத்தின் பின்னர் பெயர் சாதி முதலியையுள்ள, சாத்தனிவன், பார்ப்பானிவன், கரியனிவன் என்னும் விசேடண விசேடியத் தன்மை அகப்படுக்குஞ் சவிகற்ப ஞாநந் தோன்று

ம், அப்போது பொருளிந்திரியக் கூட்டங் கரணம்; நிருவிகற்பமே, அவாந்தர வியாபாரம், சவிகற்ப ஞானம் பலம்

எவ்விடத்து ஞானங் கரணம்? எப்போது, கூறப்பட்ட சவிகற்பத்தின் பின்னர் வெறுப்பு புத்தி விழைவுபேட்கைகடோன்றும், அப்போது நிருவிகற்பஞானங் கரணம்; சவிகற்ப மவாந்தர வியாபாரம்; வெறுப்பு முதலிய புத்திகள் பலம்

சவிகற்பமுதலியவற்றிற்கு மிந்திரியமே கரணமென்பாருமுளர்

நடுவு தோன்றியனவாகிய சந்நிகர்ஷ முதலியன எவ்வளவோ அவையனைத்தும் அவாந்தர வியாபாரம்.

அறுவகைச் சந்நிகர்ஷம் பொருளிந்திரியங்களுடைய சாட்சாற்காரிப் பிரமைக்கு ஏதுவாகிய சந்நிகர்ஷம்* யாது, அஃது அறுவகையே. அவை சையோகம், சயுத்தசமவாயம், சையுத்தசமவேதசமவாயம், சமவாயம், சமவேதசமவாயம், விசேடண விசேடிய பாவமென்பனவே

எப்போது சையோக சந்நிகர்ஷம்? எப்போது கண்ணாற் குடமிதுவென்று குடவிடயஞானந் தோன்றும், அப்போது கண்ணிந்திரியம், குடம் பொருள், அவற்றது சந்நிகர்ஷஞ் சையோகமே; நீக்கமின்றியிருத்தலின்மையின் இங்ஙன மநமென்னு மகவிந்திரியத்தால், எப்போ தான்மவிடய ஞான நானென்று தோன்றும். அப்போது மநவிந்திரியம்; ஆன்

மா பொருள்; அவற்றது சந்நிகர்ஷஞ் சையோகமே

எப்போது சையுக்தசமவாய சந்நிகர்ஷம்? எப்போது கண்முதலியவற்றாற் குடமடையுருவமுதலியவை, குடத்தின்கணுருவமுண்டென்று கிரகிக்கப்படும், அப்போது கண்ணிந்திரியம்; குடமடையுருவமுதலியவை பொருள்; அவற்றினது சந்நிகர்ஷஞ் சையுக்தசமவாயமே. கண்ணோடு சயுக்தமான குடத்தில், உருவிற்குச் சமவாயமாதலின் இங்ஙன மநத்தால் ஆன்ம சமவேதமாகிய இன்பமுதலியவை கிரகிக்கப்படும்போது மிச் சந்நிகர்ஷமே. குடமடைபரிமாணமுதலியவற்றின் கிரகிப்பினுக்கு அறுவகைச் சந்நிகர்ஷமு மிக்ககாரணமென்று வேண்டப்படும்; சையுக்தசமவாய முண்டாயினும், அஃதில்லாதபோது, சேய்மைக்கட பரிமாண மு;லிய கிரகிக்கப்படாமையின். நான்குவகைச் சந்நிகர்ஷமெங்ஙனம்? அவை: இந்திரிய வவயவங்களோடு பொருளவயவங்கட்கு, இந்திரிய வவயவிகளோடு பொருளவயவிகட்கு இந்திரிய வவயவங்களோடு பொருளவயவிகட்கு, இந்திரிய வவயவிகளோடு பொருளவயவங்கட்காய சந்நிகர்ஷங்கள்

எப்போது சையுக்தசமவேத சமவாய சந்நிகர்ஷம்? எப்போது கண்முதலியவற்றாற் குடவுருவிற்சமவேதமான உருவத்தன்மைமுதலிய சாமாநிய ஞாநங் கவரப்படும், அப்போது கண்ணிந்திரியம்; உருவத்தன்மை முதலிய சாமாநியம் பொருள். அவற்றது சந்நிகர்ஷஞ் சையுக்தசமவேத சமவாயமே. எங்ஙனம்? கண்ணோடு சையுக்தமான குடத்திலு

ருவஞ் சமவேதம் அதன்கண், உருவத்தன்மைக்குச் சமவாயமாதலின்.

எப்போது சமவாயசந்நிகர்ஷம்? எப்போது செவிப்புலனால் இது ககாரமென்றோசை கிரகிக்கப்படும், அப்போது செவி, இந்திரியம்; ஓசை பொருள்; அவற்றினது சந்நிகர்ஷஞ் சமவாயமே; செவிக்கு வான்வடிவமுண்மையின், ஓசைக்கு வான்குணத்தன்மையுண்மையின், குணகுணிகட்குச் சமவாயமாதலின்.

எப்போது சமவேதசமவாய சந்நிகர்ஷம்? எப்போது செவியிற் சமவேதமான ஓசையில் ஓசைத்தன்மை முதலிய சாமானியஞ் சுரோத்திரத்தாற் கவரப்படும், அப்போது செவி இந்திரியம்; ஓசைத்தன்மைமுதலிய சாமானியம், பொருள் அவற்றினது சந்நிகர்ஷஞ் சமவேதசமவாயம்; செவியிற் சமவேதமான ஓசையில் ஓசைத்தன்மைக்குச் சமவாயமாதலின்

எப்போது விசேடண விசேடிய பாவப் பொருளிந்திரியச் சந்நிகர்ஷம்? எப்போது கண்ணோடுசையுத்தமான நிலத்திற் குடமில்லென்று குடமுதலியவற்றின்மை கிரகிக்கப்படும் அப்போது கண்ணோடு சையுக்தமான நிலத்திற்குக் குடமுதலியவற்றின்மை விசேடியம் குடமில்லது நிலமென்னுமிடத்துக் கண்ணோடு கூடிய நிலத்திற் குடமுதலியவற்றின்மை விசேடணம், எப்போது மனத்தோடு சையுத்தமான ஆன்மாவின் கண்ணிடத் தின்பமில்லென்று சுகமுதலியவற்றின்மை கிரகிக்கப்படும், அப்போது மனத்தோடு சையுக்தமான ஆன்மாவுக்

இன்பமுதலியவற்றின்மை விசேடியம். இன்பமிலை யென்னுமிடத் தின்பமின்மை விசேடணம் எப் போது செவியிற் சமவேதமான ககாரத்திற் சகார த்தன்மையில்லென்று கிரகிக்கப்படும், அப்போது செவியிற் சமவேதமான ககாரத்திற்குச் சகாரத்த ன்மையின்மை விசேடியம். சகாரத்தன்மையில்லா து ககாரமென்புழிச் சுரோத்திரசமவேதமான க காரத்திற்குச் சகாரத்தன்மையின்மை விசேடண மாதலில்

இங்ஙனஞ் சுருக்கத்தாற் கூறுதும் ஐவகைச் ச ம்பந்தத்தின் சம்பந்தியினது விசேடண விசேடிய பாவலக்கணமான பொருளிந்திரிய சந்நிகர்ஷத்தா ல் இன்மை கிரகிக்கப்படுமே. இங்ஙனம் சமவாய மும்; கண்ணோடு சையுத்தமான நூலிற்கு விசேடி யமான ஆடை சமவாயம் இந்நூல்களிலே ஆடை சமவாயமென்று கிரகிக்கப்படும். இங்ஙனம் அறு வகைச்சந்நிகர்ஷங் கூறப்பட்டன

சங்கிரகமாகவுங் கூறுதும். இந்திரியத் தோற்ற ப்பிரமை, விகற்ப நிருவிகற்பமென இருபாற்று. ஆங்கதற்குக் கரண மூன்று சந்நிகர்ஷமாறு

அற்றாயின், நிருவிகற்ப மெய்யாகிய தன்னிலக்க ணவிடயத்தன்மையாற் காட்சியாக, உரையுமிலி ங் மும்போல அநுகதாகாரத்தை அகப்படுத்தலிற் சாமாநிய விடயமான சவிகற்பம், எங்ஙனங் கா ட்சி? பொருளிற்றோன்றியதற்கே காட்சித்தன்மை யாதலின், பொருளுமெய்ம்மையுண்ா ரயேபிறப்பிப்

பதாதலின், தன்னிலக்கண மெய்மையுண்டாயது
சாமாநியமன்று; பிரமாணத்தாற் றள்ளப்பட்ட
ண் மயுடைய பிறிதுநீக்கவடிவான அதற்குப் பொ
ய்ம்மையுண்டாதலின்; இங்ஙனமன்று, சாமாநி
யத்திற்கும் பொருளாந்தன்மை உண்மையின் இ
ங்ஙனம் பிரத்தியட்சங் கூறப்பட்டது.

2. அநுமாநம்.

இலிங்கபராமரிசம் அநுமாநம். யாதினாலநுமாநி
க்கப்படும் அஃதநுமாநம் இலிங்க பராமரிசத்தா
னே பொருளநுமிக்கப்படும் ஆதலின் இலிங்கப
ராமரிச மநுமாநம் அது புகைமுதலிய ஞாநம்; அ
நுமிதியைக் குறித்துக் கரணமாதலின் தீமுதலிய
ஞாநமநுமிதி; அதன் கரணம் புகைமுதலியஞாநம்

இலிங்கம் யாது? அதனது பராமரிசம் யாது?
கூறுதும் வியாத்திவ த்தாற் பொருளையுணர்த்து
வ திலிங்கம். எங்ஙனம்? புகை தீக் கிலிங்கம் அ
ஙனமன்றோ யாண்டுப்புகை ஆண்டுத்தீயென்னுமு
டனிகழ்ச்சிநியமம் வியாத்தி அது கிரகிக்கப்படுங்
காலே புகை தீயை யுணர்த்தும் ஆதலின் வியா
திவலத்தாற் றீயநுமாபகமாதலிற் புகை தீக் கிலிங்
கம், அதனது மூன்றாஞாநம் இலிங்க பராமரிசம்.
அங்ஙனமன்றோ முன்னே அட்டில முதலியவற்றி
ன் மறித்து மறித்தும் புகைகண்டு தீக்காணுகின்
றான் அம்மறித்துக்காண்டலாற் புகை தீக்களது
தன்னியல்பான சம்பந்தம், யாண்டுப்புகை ஆண்டு
த்தீயென்று துணியாநின்றான்

யாண்டு யாண்டு மித்திரைமகன்மை ஆண்டாண்
டுக்கருமையென்பதொக்கும் ஆயினும், மித்திரை
மகன்மை கருமைக்குத் தன்னியற்கைச் சம்பந்
தமின்று, மற்றென்னெனின் ஔபாதிகமே; அட
கு முதலிய உணவுப்பரிணாமமான பாதியுண்மை
யின். அங்ஙனமன்றே, கருமையின் மித்திரைமக
ன்மை பிரயோசகமன்று, மற்றென்னெனின், அ
டகு முதலிய உணவுப் பரிணாதி வேறுபாடே பிர
யோசகம் பிரயோசகமு முபாதியென்று கூறப்ப
டும் புகை தீக்களது சம்பந்தத்தில் ஒருபாதியுமி
ன்று; தகுதியல்லது சந்நித்தற்பொருட்டன்மை
யாதலின், தகுதியது காணப்படாமையின். யாண்
டுபாதியுண்டு ஆண்டுக் காணப்படும், எங்ஙனம்? தீ
க்குப் புகையோடு சம்பந்தத்தில், ஈரவிறகின் கூட்
டமுபாதி; கொலைமைக் கதன்சாதநத்தோடு கூ
டிய சம்பந்தத்தில் நிஷித்தத்வ முபாதி; மித்திரை
மகன்மைக்குக் கருமை சம்பந்தத்தில் அடகு முத
லிய உணவுப் பரிணாதி வேறுபாடுபாதி. ஈண்டுப்
புகைக்குத் தீயுடனிகழ்ச்சியில் ஒருபாதியுமின்று
உண்டாயின், அப்போது நிலம்போலக் காணப்ப
டும். ஆதலிற் காட்சி யின்மையி னில்லையென்னுந்
தருக்கத்துணையுடைய உணர்வின்மையோடு கூடி
ய காட்சியானே உபாதியின்மை துணியப்படும்.
அங்ஙனமன்றே உபாதியின்மையிற்றோன்றிய வா
சனையோடுகூடிய மறித்துக்காண்டலிற் றோன்றிய
வாசனையோடு கூடிய உடனிகழ்ச்சி கிரகிக்குங் கா
ட்சியானே புகை தீக்களது வியாத்தி துணியப்ப
டும். ஆதலின் புகை தீக்களுக்குத் தன்னியற்கைச்

சா[illegible]கம்; ஔபாதிகமன்று. தன்னியற்கைச் சம்
பந்தம் வியாத்தியென்று கூறப்படும்.

ஆதலின் இந்நியாயத்தாற் புகை தீக்களது வி
யாத்தி கிரகிக்கப்படுகையின் அட்டிலிற் புகைஞா
னம் யாது? அது முதலாவது; மலைமுதலிய பக்கத்திற்
புகை ஞானம் யாது? அது இரண்டாவது. பிற்பாடு
முன்னே கிரகிக்கப்பட்டதாகிய புகை தீக்களது வியா
த்தியை நினைத், தம்மலையின்கண்ணே பின்னர்ப் பு
கையைப் பராமரிசிக்கின்றான், இம்மலையிற் றீயா
ல் வியாத்தமான புகையுண்டென்று. இப் புகை
ஞானமூன்றாவது. இஃதவசியம் வேண்டப்பட்டது
வேறாயின், யாண்டுப்புகை ஆண்டுத்தீயுண்டாக ஈ
ண்டுத்தீயிருத்தலெங்ஙனம்? ஆதலி னீண்டும் புகை
யுண்டென்னு ஞானம் வேண்டப்படும். இதுவே யி
லிங்கபராமரிசம். அதுவும், அநுமிதியைக் குறித்
துக் காரணமாதலின், அநுமானம். அதனை விட்டமலை
யிற் றீயுண்டென்னு மநுமிதி ஞானந் தோன்றும்.

அற்றாயின், எங்ஙனம் முன்னரட்டிலிற் புகை
ஞானம் யாதது தீயநுமாபகமன்று. அஃதொக்
கும்; வியாத்தி கிரகிக்கப்படாமையின், வியாத்திகி
ரகிக்கப்படுகையிலே அது பிறிதோன்றலின். ஆயி
ன் வியாத்தி துணிந்தபின் பட்டிலின்கண்ணே தீ
யநுமிக்கப்படும்; இங்ஙனமன்று. தீயது காட்சி
யானையமின்மையின். ஐயப்படுபொரு ளநுமிக்கப்
படும். எங்ஙனம் பாஷியகாரராற் கூறப்படும்? அ
றியப்படாத பொருளினும் துணிந்த பொருளினு
நியாயம் ப்ரவர்த்திக்காது; மற்றென்னெனின், ஐய
ப்படும் பொருளின்கண். ஆயின்; மலையடைதனை மாத்

திரமாகிய மகற்குப் புகைஞானந் தீயை யநுமிக்கப்
பண்ணுதலெங்ஙன்? இவ்விடத் தையமுண்டன்றே;
சாதித்தல் பாதித்தலாகிய பிரமாணமின்மையால்,
ஐய நியாயத்தாலடைதலின் அஃதொக்கும்; கிரகி
க்கப்படாத வியாத்தியான் போலக் கிரகித்து மற
ந்த வியாத்திபுடைய மகற்கு மநுமாநம் பிறவாமை
யால், வியாத்திநினைவு மநுமிதி பேறுவாதலின். பு
கை காண்டலாலெழுந்த வாசனையுடை யறிப ரெகெ
து புகையது வந்நியது, எங்ஙனம், அட்டிலென்று
வியாத்தியை நினைப்பான். ஆதலிற் புகைக்காட்சி
தோன்றலின் வியாத்தி நினைவு தோன்றுகையின் இ
துவும் புகையுடைத்தென்னும் புகைஞானம் யாது,
அது மூன்றாவது. அதுவே தீயை யநுமிக்கப்பண்
ணும், மற்றையவல்ல. அதுவே யிலிங்க பராமரிச
ம். ஆதலி லிலிங்க பராமரிச மநுமாநமென்னு மி
து துணியப்படும்.

சுவார்த்தாநுமாநம்.

அவ்வநுமாநமுஞ் * சுவார்த்தமும் பரார்த்தமு
மென இருவகைப்படும். சுவார்த்தந் தன்னுணர்வி
னொது அங்ஙனமன்றே, தானே யட்டில் முதலிய
வற்றின் விசிட்ட மாகிய காட்சியாற் புகை தீக்களு
து வியாத்தியைக்கிரகித்து, மலையருகடைந் ததன்
கட் டையினையுடையனுப், மலையி னிகழ்வதா யி
னை விடாதழலத்தகாய் விண்ணுரிஞ்சும் புகை

யொழுங்கைக் கண்டு, புகைகண்டவா லெழுந்த வாசனையுடையனாய், யாண்டுப்புகை ஆண்டுத்தீயென்று வியாத்தியை நினையாநின்றான், கண்டும் புகையுண்டென்றுணராநின்றான் ஆதலின் இம்மலையிற்றீயுண்டென்று தானே யுணராநின்றான். அதுவே சுவார்த்தாநுமானம்

பரார்த்தாநுமானம்.

தான் புகையாற் றீயை யநுமித்துப் பரனைக்குறித்துப் போதிக்கும்பொருட்டுப் பஞ்சாவயவ அநுமானவாக்கியம் யாது கூறுகின்றான் அது பரார்த்தாநுமானம் அஃதெங்ஙனம்? மலை தீயுடைத்து' புகை யுண்மையான்' யாதுயாது புகையுடைத்து அது தீயுடைத்து எங்ஙனம், அட்டில்' இதுவு மங்ஙனம். ஆதலி லங்ஙனம் என்பதே. இவ்வாக்கியத்தானே பிரதிபாதிக்கப்பட்ட பஞ்சரூபத்தோடு கூடிய அவ்விலிங்கத்தாற் பரனுந் தீயை யுணராநின்று'. ஆதலின் இது பரார்த்தாநுமானம்.

அந்வயவியதிரேகி

இதின், மலைக்குத் தீ யுண்மை சாத்தியம். புகை யுண்மையேது அதுவும், அந்நுவயவியதிரேகி' அந்நுவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தி யுடைமையின். அங்ஙனமன்றே, "யாண்டுப் புகை, ஆண்டுத் தீ எங்ஙனம், அட்டிலில்' என்பது அந்நுவயவியாத்தி' அட்டிலிற் புகை தீக்களதந்நுவய உண்மையது காட்சியின்

இங்ஙனம், 'யாண்டுத் தீயில்லை ஆண்டுப்புகையுமில்லை, எங்ஙனம், மடுவில்" என்பது வியதிரேக

பியாத்தி; மடுவிற் புகை. நீக்களது வியதிரேக உண்மையது காட்சியின்

வியதிரேக வியாத்திக்குக் கிரமமிது; அந்நுவய வியாத்தியில் யாது வியாப்பியம், அதனின்மை யீண்டு வியாபகம், யாது வியாபகம், அதனின்மை ஈண்டு வியாப்பியமென்று, அங்ஙனங் கூறப்பட்டது. உண்மை வியாப்பியமும் வியாபகமும் இன்மைக்கு மாறு வரும். ஆதலினிங்ஙனம் புகையுண்மை யேதுவி லந்நுவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தியுண்டு.

வாக்கியத்தில், அந்நுவயவியாத்தியொன்றே பிரதரிசிக்கப்பட்டதேது? அதொன்றானும் பயனுதலின்; அவற்றுள்ளும், அந்நுவயஞ் செவ்விதாதலிற், பிரதரிசநஞ் செந்நெறியாற் சித்திக்கும் பொருட்குக் கோடுநெறியாற் சாதித்தல் யோகமாகாமையின்; வியதிரேக வியாத்தி யின்மையினன்று ஆதலிலிங்ஙனம் புகை யுண்மையேதந்நுவய வியதிரேகியே. இங்ஙன மேனையவும் அநித்தியத்துவ முதலிய சாதிக்கையிற் கிருதகத்துவமுதலியவேதுக்களந்நுவயவியதிரேகிகளாக அறியத்தக்கன

கேவலவி திரேகி. ஒரோவொரேதுக் கேவலவியதிரேகி. அஃதெங்ஙனம்? சான்மகத்துவஞ் சாதிக்கையிற் பிராணாதியுடைமையேது;எங்ஙனம்? 'சீவச் சரீரஞ் சான்மகம்; பிராணாதி யுடைமையின்: யாது சான்மகமன்றது பிராணாதி யுடைமைய தன்று, எங்ஙனம், குடம்; இச் சீவச் சரீர மங்ஙனமன்று; ஆதலினி

ங்ஙனமன்று" என்கை. இதிற் சிவச்சரீரத்தினது சான்மகத்துவஞ் சாத்தியம் பிராணாதி யுடைமை யேது. இது கேவலவியதிரேகி; அந்நுவய வியாத்தி யின்மையின் அங்ஙனமன்றே, யாது பிராணாதி யுடைய தது சான்மகம், எங்ஙனம் இதுவென்று திட்டாந்தமில்லை சர்வ சிவச் சரீரமும் பக்கமே

இலக்கணமுங் கேவலவியதிரேகியேது எங்ஙனம்? பிருதிவி யிலக்கணங் கந்தமுடைமை. இவ் விவாதபதம்* பிருதிவி; கந்தமுடைமையின்: யாது பிருதிவியன்றது கந்தமுடையதன்று, எங்ஙனம்? புனல். இதில் யாது கந்தமுடையது, அது பிருதிவி எங்ஙனம், இதுவென்றுதிட்டாந்தமில்லை.

பிரமாண இலக்கணமாகிய பிரமாகரணத்துவமு மவ்வாறே அங்ஙனமன்றே, காட்சி முதலியன பிரமாணமென்று வியவகரிக்கத்தக்கன; பிரமாகரணத்துவ மாதலின்: யாது பிரமாணமென்று வியவகரிக்கப்படா தது பிரமாகரண மன்று எங்ஙனம்? காட்சிப்போலி முதலியன இதில், யாது பிரமாகரணம் அது பிரமாணமென்று வியவகரிக்கத்தக்கது எங்ஙனம்? இதுவென்று அந்நுவய திட்டாந்தமில்லை; பிரமாணமாத்திரம் பக்கஞ்செய்தலின் இதில், வியவகாரஞ் சாத்தியம்; பிரமாணத்துவமன்று; அதற்குப் பிரமாகரணத்துவமாகிய ஏது வினின்றும் வேறின்மையிற் சாத்திய அபேததோஷம் வருதலின் ஆதலி னிங்ஙன கேவல வியதிரேகிகள் காட்டப்பட்டன

வேறோரேது கேவலாந்நுவயி.

கேவலாந்நுவயி. எங்ஙனம்? "விசேட மபிதேயம்; பிரமேயமாதலின்: யாது பிரமேயம், அஃது அபிதேயம் எங்ஙனம் குடம்; இதுவு மங்ஙனம் ஆதலினிங்ஙனம்' என்கை இதில், விசேடத்திற் கபிதேயத்துவஞ் சாத்தியம்; பிரமேயத்துவமேது. அதுவுங் கேவலாந்நுவயியே யாதபிதேயமாகாதது பிரமேயமுமாகாது; எங்ஙனம், இதுவென்று வியதிரேக திட்டாந்தமில்லை. எவ்விடத்தும் பிராமாணிகப் பொருளே திட்டாந்தம். அதுவும் பிரமேயமு மபிதேயமும்.

இவ்வந்நுவய வியதிரேகி, கேவலாந்நுவயி, கேவலவியதிரேகி, யென்னு மேதுக்களது மத்தியில், எவ்வேது அந்நுவய வியதிரேகி, அது பஞ்சரூபத்தோடு கூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்கவல்லது; ஒரு ரூபத்தானுங் குறைந்ததாகாது.

பஞ்சரூபங்கள். அப் பஞ்சரூபங்கள், பக்கத் தருமத்வஞ், சபக்கத்திற் *சத்துவம், விபக்கத்தில் §வியாவிருத்தி, அபாதித விடயத்வம், †அசத் பிரதிபக் மென்பனவாம் இப் பஞ்சரூபங்கள் புகையுடைமை முதலிய அந்நுவயவியதிரேகி யேதுக்களி னிருக்கும். புகையுடைமை பக் மான மலைக்குத் தருமம், மலையினடை திருத்தலின் இங்ஙனஞ் சபக்கத்தினும் சபக் மாகிய அட்டிலினிருக்கு மென்பதுபோ

* சத்துவம்-உண்மை. § வியாவிருத்தி-நீக்கம்
† அசத்-இன்மை

ருள். இங்ஙனம் விபக்கமாகிய மடுவினிக்கண் அ
ண்டில்லையென்பது பொருள். இங்ஙனம் புகை யு
டைமை யவாதிதவிடயம். அங்ஙனமன்றோ பு
கையுடைமையாகிய ஏதுவுக்கு விடயஞ் சாத்திய
தருமம். அது தீயுடைமை, யாது பிரமாணத்தானு
மவாதிதம் கண்டிக்கப்படாதென்பது பொருள்.
இங்ஙனம் புகையுடைமை பிரதிபக்கமில்லது அ
ங்ஙனமன்றோ சாத்தியத்தின் விபரீத சாதக ஏத்வ
ந்தரம் பிரதிபக்கமென்று கூறப்படும். அதுவும் பு
கையுடைமையேதுவினின்றே; தோன்றுமையின்.
ஆதலினிங்ஙனம் பஞ்ச ரூபங்கள் புகையுடைமை
யேதுவிலிருக்கும். ஆதலினிப் புகையுடைமை
தீயுடைமையது கமகம். அது தீயுடைமையது சா
தகம் என்பது பொருள்.

தியினது பக்கத் தருமத்துவம், ஏதுவினது பக்
கத் தருமத்துவவலியாற் சித்திக்கும். அங்ஙனமன்
றோ அநுமானத்தின் சாமர்த்தியம் வியாத்தியும் ப
க்கத் தருமத்துவமுமென இரண்டு அவற்றுள், வி
யாத்தியாற் சாமாநிய சித்தி; ஏதுவினது பக்க தரு
மத்துவ வலியாற் சாத்தியத்திற்குப் பக்க சம்பந்த
த்துவ விசேடஞ் சித்திக்கும். மலைத்தருமமாகி
ய புகையுடைமையாற் றீயும் மலைச்சம்பந்தமாயே
யநுமிக்கப்படும். வேறாயிற் சாமாநியம் வியாத்தி
கிரகிப்பதானே சித்தித்தலின் அநுமானத்தாற் ப
யனென்னை?

வேறு மற்றுவயவியதிரேகி யேது யாதது பஞ்
சரூபத்தோடு கூடியே நல்ல ஏதுவாம். வேறாயின்,
ஏதுப்போலி ஏதுவல்லதென்னு மளவு.

கேவலாந்நுவயி நான்கு ரூபத்தோடு கூடியே த
ன்து சாத்தியத்தைச் சாதிக்கும் அதற்கு விபக்க
த்தி னீக்கமின்று: விபக்கமின்மையின்.

கேவலவியதிரேகி ான்கு ரூபத்தோடு கூடியே
அதற்குச் சபக்கத்தினுண் மயின்று; சபக்க மின்
மயின்

பக்கம் சபக்கம் விபக்கம் யாவை? கூறுதும்

ஐயமுடைய சாத்திய தருமத்தையுடைய தருமி
பக்கம். எங்ஙனம்? புகை அநுமானத்தின், மலை

நிச்சித சாத்திய தருமத்தையுடைய தருமி சபக்
கம் எங்ஙனம்? இப்புகையநுமானத்தின கண்ணே,
ட்டில்

விபக்கம் நிச்சித சாத்திய மில்லாத தருமி எங்
ஙனம்? ஆண்டே மடு ஆதலின் இங்ஙனம் அந்நுவ
யவியதிரேகி,கேவலாந்நுவயி, கேவலவியதிரேகி யா
கிய மூன்றேதுவு காட்டப்பட்டன அவற்றி
வேறுபட்ட ஏதுப்போலிகள்

ஏதுப்போலி

ஏது லக் ண ரகிதமாய் ஏதுவைப்போல விளங்
குவன ஏதுப்போலிகள் அவையும் அசித்தம், விரு
த்தம் அநைகாந்தி ம் பிர ரணசமம், காலாத்திய
யாபதிட்டம் என்னும் பேதத்தா லைவகையே.

அவற்றுள் ஆநிச்சித பக்கவிருத்தி யசி
அசித்த . த்தம் அது ஆசிரயாசித்தம், சொரூ
பாசித்தம், வியாப்பியத்து வாசிக்கமெ
மூ று கயே

ஆசிரயாசித்த மெங்ஙனம்? வான்றாமரை மணமுடைத்து தாமரைத்தன்மையால்; பொய்கைத்தாமரைபோல இதில், வான்றாமரை யாசிரயம்; அதுமின்றே.

சொரூபாசித்த மெங்ஙனம்? சத்த மநித்தியம்; கட்புலப்படுதலால்; குடம்போல இதிற் கட்புலப்படுதலேது. அதுவுஞ் சத்தத்திற் கின்றே; சத்தஞ் செவிப்புலப்படுதலின்

வியாப்பியத்துவாசித்தம் இருவகை ஒன்று, வியாத்தி கிரகிப்பதாகிய பிரமாணமின்மையின், மற்றைய துபாதி யுண்மையின் வியாப்பியத்துவாசித்தம் அவற்றின், முதலெதங்ஙன்? பாது சத்து அது கணிகம், எங்ஙனம்? முகிற் படலம் சப்தாதியுஞ் சத்து. சோபதி கதையாற் சத்துக்கு வியாப்பியத்துவாசித்தங் கூறில் வேறடைந்த கணிகத்துவம் வேண்டப்படும். இரண்டாவ தியாது? வேள்வி னிகழுங் கொலை யதன்மசாதநம்; கொலையால் வேள்விப்புறத்துக் கொலைபோல இதின், அதன்மசாதநத்தின்கட் கொலைமை பிரயோசக மின்று மற்றென்னை? நிஷித்தத்வமே பிரயோசகம் உபாதியென்னு மளவு அங்ஙனமன்றோ? சாத்திய வியாபகத்துவமாய்ச் சாதநத்திற் கவ்வியாபகத்துவமாதல் உபாதியென லுபாதி யிக்கணம் அதுவும் நிஷித்தத்துவத்தின்க ணுண்டு நிஷித்தத்வஞ் சாத்தியமான அதன்ம சாதநத்துவத்துக்கு வியாபமே; எங்ஙனம்? யாண்டியா டதன்ம சாதநத்துவம் ஆண் டாண் டவசிய நிஷித்தத்வ

ம். இங்ஙனஞ் சாதநமான கொலை மையை நிஷித்தத்வம் வியாபியாது: யாண்டு யாண்டு கொலைமை, ஆண்டாண் டவசிய நிஷித்தத்வ மின்று; வேள்வியினது பசுக்கொலையி னிஷித்தத்வ மின்மையின். அந்ய பிரயுக்தமான வியாத்தியோடு கூடிய கொலைமை வியாப்பியத்துவாசித்தமே

சாத்திய விபரீதத்தோடு வியாத்தம்,

விருத்தம். விருத்தம் அஃதெங்ஙனம்? சத்தநித்தம்; காரியத்தன்மையால்: வான்போல. காரியத்தன்மை சாத்தியமான நித்தியத்துவ நதுக்கு விபரீதமான அநித்தியத்துவத்தோடு வியாத்தம் யாது காரியம் அஃது தநித்தியமே நித்தியமன்று. ஆதலிற் காரியத்தன்மை விருத்தம்

வியபிசாரத்தோடுகூடிய தநைகாந்

அநைகாந்திகம். திகம் அஃது சாதாரண அநைகாந்திகம் அசாதாரண அநைகாந்தி

மெனஇருவகைத்து அவற்றுள் பக்கசபக்க விபக்கத்திலிருப்பது சாதாரண அநைகாந்திகம் எங்ஙனம்? சத்தநித்தியம்; பிரமேயத்தன்மையால்; வியோமம் போல இதிற் பிரமேயத்தன் மயேது அஃது நித்திய அநித்தியத்திருப்பது சபக்க விபக்கநீக்க மியாத தசாதாரண அநைகாந்திகம் அஃதெங்ஙனம்? நிலநித்தம்; மணமுடைமையால் வியோமம் போல மணமுடைமை சபக் மாகிய நித்தியத்துவநின்றும் விபக்கமாகிய அநித்தியத்துவநின்றும் நீக்கம் நியமாத்தி ரயி னிருத்தல்

விரா நம. — எவ்வேதுக்குச் சாத்திய விபரீத்தைச் சாதிக்கு வேத்வந்தரமுண்டதுவேபிரகரணசமம் எங்ஙனம்? 'சத்த மநித்தியம்; நித்திய தருமமின்மையால் சத்தநித்தியம்; அநித்தியதருமந் தோன்றுமையால்'' எ பதுவே இதுவே சற்பிரதிபக்கமென்றுங் கூறப்படும்.

நல தீதிய நபதிட்டம. — பிரமாணாந்தரத்தாற் றுணிந்த சாத்திய பின்மையேது வாதித விடயம் காலாத்தியயாபதிட்டமென ( ) கூறப்படும் எங்ஙனம்? தீ வெம்மையிலது; பதார்த்தத்வத்தால்; புனல்போல இதில் பதார்த்தத்வமான ஏதுவுக்குச் சாத்தியம் வெம்மையின்மை. அதன்மை நட்சி யாலோ துணியப்பட்டது, பரிசனக் காட்சியால் வெம்மை தோன்றலின் ஆதலி னிங்ஙன மநுமா நம் உணர்த்தப்பட்டது.

3 உபமாநம.

அதிதேசவாக்கியப் பொருணினைவோடு கூடிய ஆவொப்புமை விசிட்ட பிண்ட ஞாநம் உபமாநம் எங் . னம்? ஆமா வுணராணும், எங்ஙனம் ஆ அங்ஙனம் ஆமா, என்றோ ராரணியக புருஷனாற் கேட்டு வநத்துட் புக்கு வாக்கியப்பொரு ணினைத்துக் கொண்டு, எப்போ தாவொப்புமை விசிட்டபிண்டங் காணுகின்றன், அப்போதவ் வாக்கியப் பொருணோ ாடு கூடிய ஆவொப்புமை விசிட்ட பி

ண்ட ஞாநம் ரூபமாநம்; உப 'திரையைக் குறித்துக் கரணயாதலின். அவொப்புமை விசிட்ட பிண்டங் கண்டபின்னர், இது ஆமா சப்த வாக்யமான பி ண்டமென்னு நாம நாமி சம்பந்த ப்ரதீதி யுபமி தி. அதுவே பலம். இங்ஙன ரூபமாந முணர்த்தப் பட்டது.

4. சப்தம்.

ஆப்த வாக்யம் சப்தம். ஆப்தன் உள்ள பொ ருளை யுபதேசிக்கும் புருஷன். வாக்யம், அவாய் நிலை, யோக்யதை, அண்மையுடைய பதங்களின து சமுகம். ஆதலினுனே "ஆபுரவி மகன் யானை" யென்னும் பதங்கள் வாக்யமல்ல, ஒன்றற்கொன் றவாய்நிலை யின்மையின். "தீயானனைக்க" என்பது வாக்யமன்று, யோக்யதையின்மையின். தீ நனை த்தல்கட் கொன்றற் கொன்றந்வய யோக்யதை யின்றே. "தீயால்' என்னு மூன்றுவதால் "நனைத் தல்" ஆகிய காரியத்தைக் குறித்துக் கரணத்தன் மை தீக்குக் கூறப்பட்டது. தீ நனைத்தற் கரணமா ம் பொருட்டு யோக்யமன்று. ஆதலிற் காரிய கா ரண பாவ இலக்கண சப்பந்தத்திற் றீ நனைத்தல் கட்கு யோக்யமின்மையிற் றீயானனைக்க என்பது வாக்யமன்று. இங்ஙனம் ஒவ்வொரு யாமத்தின் ஒருங்குச்சரிக்கப்படாத "வெள்ளை—ஆவைக் கோலாற் கொணர்க" என்னும்பதங்கள் வாக்ய மல்ல. ஒன்றற் கொன் றந்வய யோக்யதையுளதா

யினும், ஒன்றற்கொன் றவாய் நிலையுளதாயினும் ஒன்றற்கொன் றண்மையின்மையின். யாவை அவா ய்நிலையன, யோக்கியதையன, அண்மையன, அவை பேவாக்கியம் எங்ஙனம்? 'ஜ்யோதிட்டோமத்தா ற் றுறக்கம் வேண்டியான் வேட்க' என்பது முதலி யன; "ஆற்றங்கரையி லைந்து கனிக ளிருக்கின்றன" "ஆவைக் கொணர்தி' என்பன முதலிய பதங்களா மே விளம்பமின்றி யுச்சரிக்கப்பட்டன.

அற்றாயின், இதிற் பதங்க ளவாய்நிலையன அல்ல மற்றென்னெனிற் பொருள்கள்' கனி முதலிய ஆ தேயங்கட்கே கரை முதலிய ஆதார அவாய் நிலைமை யால்: ஆராயிற் பொருள்களும் அவாய்நிலையனவல் ல; அவாய்நிலை இச்சை வடிவாய சேதந தருமமா தலின்: அங்கெதாக்கும் பொருள்க டம்பதங் ளை கேட்பானுக் கொன்றற்கொன்று விடயமான அ வாய்நிலைடைத் தோற்றுவித்தலின், அவாய் நிலையன வெனக் கூறப்படும் அதன் வழியா லதனைக் கூறு ம் பதங்களு மவாய் நிலையனவென உபசரிக்கப்படு ம். பதங்களே பொருளைப் பிரதிபாதித்துக்கொண் டு பொருள் வேறுபாட்டு விடய அவாய்நிலையை த் தோற்றுவிப்பனவென்னு முபசாரத்தா லவாய் நிலையன வென்றுமாம் இங்ஙனம் பொருள்க ளவா ய்நிலையன; ஒன்றற்கொன் றந்வய யோக்கியமுடை யனவுமாம் அதுவழியாற் பதங்களு மவாய் நிலைய ன யோக்கியமுடையன வென் றுபசரிக்கப்படும் அண்மை பதங்க ளொருவனானே விளம்பமின்றி உ ச்சரிக்கப்படுதல். அதுவுஞ் சாட்சாதே பதங்களினு டைடு; பொருள்வழியா னன்று ஆதலின் இப்பொ

ருளுண்டாயிற்று. பொருள் கூறும் வழியாற் கேட்பானுக்குப் பதவேறுபாட்டு விடய அவாய் நிலையையாயினும் பொருள் வேறுபாட்டு விடய அவாய்நிலையையாயினுந் தோற்றுவிக்கின்ற, விளங்கும் ஒன்றற்கொன்றந்வயமான யோக்கியப்பொருளைக் கூறுகின்ற அண்மையுடையபதங்களது கூட்டம் வாக்கியம். பதமு மெழுத்துக்கூட்டம்* ஈண்டுக்கூட்ட மொருஞாந விடயமாதல். இங்ஙனம் அதின் முறையுடையவாகிய எழுத்துக்கட்கு விரையக்கெடுதலுண்மையின் ஒருங்கே அநேக வெழுத் தநுபவமுண்டாகாமையின் முதன்முத லெழுத்துக்களை அநுபவித் திற் றெழுத்துக் கேட்குங்கான் முதன்முதலெழுத் தநுபவத்தாற் பிறந்த வாசனையோடு கூடிய ஈற்றெழுத்தோடு பொருந்தி'' பதத்திற்கமைந்த பொருட் சங்கேதங் கிரகித்தலால் அளிக்கப்பட்ட செவிப்புலனால் ஒருங்கே சதசத்தான பலவெழுத்தை யகப்படுக்கும் பதவுணர்வு தோன்றுந் துணைவலியால் பிரத்யபிஞா ம் போலப் பிரத்யபிஞா க் ாட்சியில் அதீதமாயு முன்னரவத் ததோ ' றுமே அன்றே பின்னர் முதன்முதற் பதாநுபவத்தாற் றோன்றிய வாசனையோடு கூடிய பதப்பொருண் ஞானத்தால் அளிக்கப்பட்ட ஈற்றுப் பதவிடயச் செவிப்புலனாற் சதசத்தான பல பதத்தை அகப்படுக்கும் வாக்கியஞானமுண்டாம்

* பதம் 'எழுத்துக் கூட்டம்' என்றாரேனும் சிறுபான்மை ஓரெழுத்தே பதமாதலுமுளதென்றறிக.

இவ்வாக்கியம் ஆப்த மகனாற் கூறப்பட்டுச் சப்தப் பிரமாணமாம். அதற்குப் பலம் வாக்கியப் பொரு ளுணர்வு. இச் சத்தப் பிரமாண லக்கணம் லகினு ம் வேதத்தினும் பொது. உலகத்தின் இது விசே டம். யாவனாயினு மொருவ னாத்தனாவான்; அனை வருமல்லர் ஆகலின் உலக வாக்கியஞ் சிறிதே பிர மாணம் ஆப்தனைக் கருத்தாவாகவுடைய வேதத் திற் பரமாப்தனான சிறிமகேசனாற் கூறப்பட்ட வா க்கியமெல்லாம் பிரமாணம்; எல்லாம் ஆப்தவாக்கி யமாதலின்.

நான்கு பிரமாணமும் வர்ணிக்கப்பட்டன இவ ற்றின் வேறாயின பிரமாணமல்ல; பிரமாணமாயினு ம் சண்டேயடங்குதலின்

அருத்தாபத்தி

அற்றாயின், அருத்தாபத்தியும் வே று பிரமாண மாகவுண்டு அநுமனமன்றோ, பரியனான தேவதத் தன் பகலுண்ணானென்று கண்டாயினுங் கேட்டா யினு மிரவுண்டல் கற்பிக்கப்படும்; பகலுண்ணானது பருமை யிரவுண்டலன்றிக் கூடாது ஆதலின் பரு மை வேறொன்றா லாகாமை தோற்றுவித்த அருத் தாபத்தியே இரவுண்டலிற் பிரமாணம், அது காட் சி முதலியவற்றின் வேறு, இரவுண்டல் காட்சிமு தலியவற்றிற்கு விடயமாகாமையின்: இங்ஙனம ன்று; இரவுண்டல் அநுமானவிடயமாதலின் அநு மனமன்றோ, தேவதத்தன் இரவிலுண்பன், பகலு

ன்றுறையினும் பரியனாதலின், யாவனொருவன் இரவிலுண்ணானென் பகலுண்ணானையும் பரியனாகான், எங்ஙன்? பகலிரவிலுண்ணான் பரியனாகான்; இவன் அங்ஙனமல்லன், ஆதலின அங்ஙனமல்லன், என்னுங் கேவலவியதிரேகி அநுமானத்தால் இரவுண்டறோன்றலின், அருத்தாபத்தி கற்பனையாற் பயனென்?

அபாவம்.

அற்றாயின், அபாவமென்பதும் வேறு பிரமாணமாயுண்டு; அதுவும், இன்மை கவர்தற்பொருட்டு வேண்டப்படும், அங்ஙனமன்றோ, குடமுதலியவற்றினநுபலத்தியாற் குடமுதலியவற்றினபாவந் துணியப்படும். (அநுபலத்தி உபலத்தியின்மையென்றது) அபாவப் பிரமாணத்தாற் குடமுதலியவற்றின்மை கிரகிக்கப்படும்: இங்ஙனமன்று; ஈண்டுக் குடமுண்டாயின், அப்போது நிலம்போலக் காணப்படும்; குடங் காணப்படாதிருப்பதே, அதனாற் காட்சியின்மையின் இல்லையென்னுந் தருக்கத்துணைபுடைய தோன்றாமையோடு கூடிய காட்சியானே, அபாவங் கிரகிக்கப்படுதலின்.

அற்றாயின் இந்திரியங்கடம்மோடு சம்பந்தப்பொருள் கிரகிப்பன அங்ஙனமன்றோ; இந்திரியங்கள் வஸ்துவையடைந்து விளக்கும். ஞாநகரணமாதலின்; ஆலோகம் போல இங்ஙனமாயினுங் கண் செவிகள் வஸ்துவை அடைந்து விளக்கும்; புறவிந்திரியமாதலின்; மெய் முதலிய போல மெய் முதலிய அடைந்து காரிப்படுதல் உபயவா

திசித்தமே இந்திரிய அபாவங்கட்குச் சம்பந்த மேயில்லை, சம்பந்தங்கள் சையோக சமவாயமேய ன்றோ? அவை, அவற்றிற்கில்லை; விசேடண விசே டிய பாவஞ் சம்பந்தமேயன்றோ' வெறுதல், இரு பொருட்கணிற்றல், ஒன்றுதலின்மையின் சம்பந் தஞ் சம்பந்தி னில் வேறுதலும் உபய சம்பந்திகளி லடைதலு மொன்றுதலு முடையத ேரோ? எங்ங னம்? முரசு குணிற் சையோகம் அது முரசு கு ணில்களில் வேறுதலு மவற்றை யடைதலு மொன் றுதலுமாம் விசேடண விசேடிய பாவ மங்ஙனம ன்று; அங்ஙனமன்றோ, தண்ட புருடனுடைய வி சேடண விசேடிய பாவம் அவற்றின் வேறன்று' தண்டத்திற்கு விசேடணத்துவம் வேறு பொருள ன்று' மற்றென்னெனிற் சொரூபமே—அபா மு ம் விசேடணமாதலின் திரவியமுதலியவற்றின் வே. றுன ஒருபொருள் அபாவத்திற் சம்ப மாகாது ஆதலின் அபாவத்திற்குத் தன்னை யுடையதென் னு ம் புத்தி யத் தோற்றுவிப்பதான சொரூபம் யா ததுவே விசேடணத்துவம்' அது வேறுபொருளன் று இங்ங ம் வியாபகத்துவ காரணத்துவ முத லியவு மூ ந் த்தக்கன தன்னோடு கூடியதென் னும் புத்தியைத் தோற்றுவிப்பதான சொரூபம் யா தது தி முதலியவற்றிற்கு வியாப த்துவம்; று ' முதலியவற்றிற்குக் ரணத்துவமுங் ாரியத் தாற் றொடரப்பட்ட அ' நுவயவியதிரேகி சொரூப மே; வேறு பொருளன்று' அபாவமும் வியாபகமா தலின் ாரணமுமாதலின் அபா த்திற் சாமாங் ய முதலியன சம்பவுமா ா இங்ஙனம் விசேடண

விசேடிய பாவம் விசேடண விசேடிய ரூபத்தினி ன்று வேறன்று; இருபொருட்க ணிற்பதுமனாற விசேடணத்தில் விசேடண பாவமாத்திர முண்மை யின், விசேடியபாவமின் மையின் விசேடியத்தி லும் விசேடிய பாவமாத்திர முண்மையின், விசே டணபாவ மின்மையின் ஒன்றுமன்று' விசேடண த்தினது பாவமும் விசேடியத்தினது பாவமுமென உம்மைத் தொகை யீற்றினின்ற பாவமென்னுஞ் சொல் வேறு வேறு புணரும் இ வ இர 'டு, ச ம்பந்தம் ஒன்று; ஆதலின் விசேடண விசேடியபா வஞ் சம்பந்தம ' று இங்ஙனம் வியாப்பிய வியா பக பாவ முதலியவும் சம்பந்தம் என்னுஞ்சொற் பிரயோக மிர ' டாற் கூறப்படுதல் ஒப்புமையால், உபசாரமா, ின் ஆதலின் சம்பந்தமில்லாத அ பாவத் 'ற் இந்திரியத்தாற் கிரகித்தலுண்டா ாது: அஃதொக்கும்; வியாத்தி பாவத்தோடு கூடியதா தலின், பாவத்தை 'ளக்கு மிந்திரிய ம டங்கேவி ளக்கும்; அபாவமன்று பாவத்தை விள 'கு மிந்தி ரியம் விசேட விசேடிய முகத்தானே யென்பது சித்தாந்தம் சம்பந்தமில்லாத அபாவ ' கிரகித்தலி ல் அதிப் பிரசங் தோஷம் விசேட த்துவத்தா னே விலக்கப்படும் பரமதத்தினு மொ 'கும்.

பிராமாண்யம

இஃ திப்போது கூறப்படும் புனன் முதலிய ா நங் தோன்றுமை யில் அந்த ஞானத்தினது பிராமா ண்யந் துணிந்த, ாருவன் புனன் முதலியவற்றிற்

செல்லாநின்றான்; ஒருவன் ஐயத்தானே சென்றான், சென்ற பிற்காலத்துப் புனல் முதலியவற்றை யடைந்தபோது பிராமாண்யந் துணிகின்றான்—இது வஸ்து கதி. இதில் ஒருவன் கூறினான்: முன்னரே பிராமாண்யந் துணிந்து மகன் செல்கின்றான்; தன்னாலே பிராமாண்யந் துணியப்படுதலின். இதன் பொருள்: எதனானே ஞானங் கிரகிக்கப்படும், அதனானே யதனையடைந்த பிராமாண்யமும்; ஞான தருமமாகிய பிராமாண்யங் கிரகிப்பது ஞானங் கிரகிப்பதின் வேறன்று. ஆதலின் ஞானத்தை யடைந்த பிராமாண்யத்திற்குத் தன்னாற் றுணிதல் ஞானங் கிரகிப்பதின் வேறு வேண்டாமையே. ஞானமுஞ் செல்வதற்கு முன்னமே கிரகிக்கப்படும். வேறாயின், பிராமாண்ய அப்பிராமாண்ய ஐயமும் எங்ஙனமுண்டாம்? ஆதலின் செல்வதற்கு முன்னமே ஞானத்தை வேறொன்றாத் தோன்றாமை தோற்றுவித்த அருத்தாபத்தியால் ஞானங் கிரகிக்கப்படுகையில், ஞானத்தையடைந்த பிராமாண்யமும் அருத்தாபத்தியானே கிரகிக்கப்படும். பின்னர்ப் புருடன் செல்வன். முதல் ஞானமாத்திரம் கிரகிக்கப்படும். பின்பு, சென்றதற்குப் பின் பலங் கண்டலால் ஞானத்திற்குப் பிராமாண்யந் துணியப்படும் என்பதன்று இதிற் கூறுவது. ஞாதத்வம் வேறொன்றாய்த் தோன்றாமை தோற்றுவித்த அருத்தாபத்தியால் ஞானங் கிரகிக்கப்படுமென் றியாது கூறப்படும் அதுவே புட்பாட்டதன்று. அதனாற் பிராமாண்யங் கிரகித்தல் செய்மைக்கண்ணே நீங்கும். அங்ஙனமன்றோ பாட்டுடைய அபிமதமின்றோ? குட முதலிய விடய

ஞானந் தோன்றாழி யென்று லறியப்பட்ட திக்கு டமென்று குடத்திற்கு ஞாதத்துவந் துணியப்படும். ஆதலின் ஞானமுண்டாகையில் ஞாததையென்றொரு தருமம் பிறக்குமென் றநுமிக்கப்படும். அதுவும் ஞானத்திற்கு முன் பிறவாமையின், ஞானம் பிறக்கையிற் பிறத்தலின, அந்நுவயவியதிரேகங்களால் ஞானத்தாற் பிறக்குமென்று துணியப்படும் இங்ஙனம் ஞானத்திற் பிறந்த இஞ்ஞாததையென்பதொரு தருமமுண்டு. அதுவும் ஞானமல்லாமற் பொருந்தாது; காரணமன்றிக் காரியந் தோன்றாமையின். ஆதலின் அருத்தாபத்தியா லதன் காரணஞானம் ஞாததையாற் றுணியப்படுமென இது கூடாது ஞானவிடயதை இதின் வேறான ஞாததையிற் பிரமாணமின்மையின்.

அற்றாயின் ஞானத்திற் பிறந்த ஞாததை யாதாரத்துவமேயன்றோ குட முதலியவற்றிற்கு ஞானவிடயத்துவம் அங்ஙனமன்றோ தாதாத்மியத்தால் விடயதையில்லை; குடஞானங்கட்குத் தாதாத்மியமின்மையின் அதனிற் றோன்றலால் விடயத்துவங் கூறில் இந்திரியங்கட்கு விடயத்துவம் வரும் இந்திரியங்களானும் அந்த ஞானந் தொன்றுதலின்.

ஆதலின் இது யூகிக்கப்படும் ஞானத்தாற் குடத்திலொன்று பிறப்பிக்கப்படும். எதனாற் குடமேயந்த ஞானத்திற்கு விடயமாம் வேறன்றென்று ஆதலின் விடயத்துவம் வேறொன்றாய்த் தோன்றாமையானே ஞாததை யறியப்படும் காட்சி மாத்திரையானேயன்று: இங்ஙனமன்று; இயற்கையானே விடயத்துவங் கூடுதலின் பொருள்ஞானங்க

ட் ஓித்தன்மையமே யியற்கை விசேடம் ஏதனால் அவற்றிற்கு விடயவிடயீ பாவம் வேறாயின் இறப்பெதிர்வுகட்கு விடயத்துவ மின்றாதல் வேண்டும். அவற்றில் ஞானத்தால் ஞாதனை தோன்றுதல் கூடாமையின் இல்லாத தருமியி 'r றருமந் தோன்றுதல் பொருந்தாமையின் இன்னும் ஞாதனையும் ஞானவிடயமாகலின் அத ' கண்ணும் வேறு ஞாதனை வர 'வேண்டும். அங்ஙனமாயின் அநவத் த. ஆயின் வேறு ஞாதனை யின்றியும் இயற்கையானே ஞாதனைக்கு விடயத்துவமென்னிற் குடமுதலிய ற்று ஞாதனையாமெனை ஞாதனையுண்டாகும் ஆயினும் அதனானே ஞானமறியப்படும் பிராமாண்யங் கிரகிக் ப்படாது பிரமாண ஞான நீ ' காத ஞாதனை விசேடத்தால் பிராமாண்ய ' கிரகிக்கப்படும், பிராமாண்யத்திற்கு ஞானங் கிரகிப்பதானே கிரகிக்கப்படுதல் யாண் டயது? ஆயின் பிரமாண ஞான நீங்காத ஒரு ஞாதனை விசேடத்தால் ஞானப் பிராமாண்ய ' கள் கூடவே கிரகி ' ப்படும்

இங்ஙனமாயின் அப்பிராமா 'ரயத்திலும் இது கூறலாம். அப் பிரமாண ஞானநீங்காத ஒரு ஞாதனவிசேடத்தால் ஞான அப் பிராமாண்யங்கள் கூடவே கவரப்படுமென்று அப் பிராமா ' யமு ' தன்னானே கவரப்படும் இங்ஙனமாயினும் அப்பிராமாண்யம் பிறிதானே பிராமாண்யமும் பிறிதானே கிரகிக்கப்படும். ஞானங் கிரகித்தலின் வேறென்பதிதன் பொருள் ஞான மானந்தக் காட்சியாலே ரகிக் ப்படும்; பிராமாண்யம் அநுமானத்தால்

பிராமாண்யம்.

அங்ஙனமன்றே புனன் ஞாநத்திற்குப் பின் புனல் வேண்டியானது செலவிருவகை, பலமுடையதும் பலமில்லதுமென. அவற்றுள் யாது பயனோடுகூடிய தது பலமுடைச் செலவு. அதனால் ஞாநத்திற்கு மெய்மை யநுமிக்கப்படும். பிரயோகமும்: விவாதத்தாற் றழுவப்பட்ட புனன்ஞாநம் பிரமாணம் பயனுடைச்செலவுதோற்றுவித்தலான். யாதுபிரமாண மன்றது பயனுடைச் செலவைத்தோற்றுவியாது; எங்ஙனம்? பிரமாணப் போலி. இது கேவலவியதிரேகி. இதிற் பயனுடைச் செலவைத் தோற்றுவிப்பதான புனன் ஞாநம் யாதது பக்கம் அதனது பிராமாண்யம் சாத்தியம் மெய்மை யதாமென்று பொருள். பிரமாகரணத்துவமன்று; நினைவால் வியபிசாரம் வருதலின். எது சமர்த்தப்பிரவிருத்தி சநகம் — பய டைச் செலவைத் தோற்றுவித்த தென்னு மளவு. இக்கேவலவியதிரேகி யநுமாநத்தா லப்பியாச தசையி லுண்டான ஞாநத்திற்குப் பிராமாண்யந் துணிகையில் அது திட்டாந்தமாகச் செலவுக்கு முன்னருந் தன் சாதியத்துவத்தால் அந்வயவியதிரேகி யநுமாநத்தாற் பயின் றறியாத ஞாநத்தினது பிராமாண்யமநுமிக்கப்படும். ஆதலிற் பிறிதானே பிராமாண்யம் ஞாநங் கிரகிப்பதானே, கிரகிக் ப்படுவதன்று.

பிரமாணங் ள் கூறினும், பிரமேயங்கள் கூறாதும்.

பிரமாண முற்றும்.

௨, பிரமேயம்.

ஆன்மா, சரீரம், இந்திரியம், அருத்தம், புத்தி, மநம், பிரவிருத்தி, தோடம், பிரேத்தியபாவம் பலம், துக்கம், அபவருக்கம், பிரமேயம் என்பது சூத்திரம்.

1 ஆன்மா.

அவற்றுள் ஆன்மத்துவ சாமாநியவான் ஆன்மா. அவனுந் தேகேந்திரியங்களின் வேறாயினான், சரீரங்கடோறும் பின்னமாயினான்; விபு; நித்தியன்; அவனு மாநதக் காட்சியான். விபாகத்திற் புத்தியாதி குணவிங்கமுடையன், அநுமானமன்றோ, புத்தியாதிகள் குணங்கள; அநித்தியமாய்க் கொண்டோரிந்திரியத்தாற் கிரகிக்கப்படுதலால்; ரூபம் போல. குணமுங் குணியைப் பற்றியதே. அவற்றுள், புத்தியாதிகள் பூதங்கட்குக் குணமல்ல; மாநதக் காட்சித் தன்மையால். யாவை பூதங்கட்குக் குணங்கள் அவை மநத்தாற் கிரகிக்கப்படா எங்ஙனம்? உருவாதிக டிக்குக் காலமநங்களுக்குக் குணங்களல்ல; விசேட குணமாதலின். யாவை திக்காதிகுணங்கள் அவை விசேடகுணமல்ல; எங்ஙனம்? சங்கியை முதலிய அவை யெல்லாப் பொருள்கட்கும் பொதுக்குணங்கள் புத்தியாதிகள் விசேட குணங்களே; குணமாய்க் கொண்டோரிந்திரியத்தாற் கவரப்படுதலின் உருவம் போல ஆதலிற் றிக்காதிகளுக்குக் குணங்களல்ல. ஆதலின் இவ்வெட்டுத் திரவியங்களினின்றும் வேறாய்ப் புத்தியாதிகட்குக் குணி வேண்டத் தக்கது. அதுவே

யா மா பிரயோ மும்: புத்தியாதிகள், பிருதிவி யாதி யஷ்ட திரவியங் ளின் வேறான திரவியத்தை ப் பற்றுவ பிருதிவியாதி யஷ்ட திரவியங்களைப் பற்றுமலு குணமாதலின். யாது பிருதிவியாதி ய ஷ்ட திரவியங்களின் வேறாய திரவியத்தைப் பற்று தது பிருதிவியாதி யஷ்ட திரவியங் களைப் பற்றும ற் குணமன்ற எ னைய? உருவாதி. இது கேவ லவியதிரேகி. அந்நுவயவியதிரேகியானும் ளக்கு ப எ னம்? புத்தியாதிக பிருதிவியாதி யஷ்ட திரவிய ளின் வே றான பொருளைப் பற்றுவன பிருதிவியாதிகளைப் பற்றுமற் குணமாதலி யாது எதைப்பற்றுமற் குணம், அது அதின் வேறுபதை ப்பற்றுவதாம். எங்ஙனம்? பிருதிவியாதியைப் பற் று ஒலி பிருதிவியாதிக்கு வேறான வானைப்பற்றிய தெ று ஆதலின், இங்ஙனம், பிருதிவியாதி யஷ் டதிரவிய ளின் வேறுயொ பதாம்பொருளான ஆன்மாச் சித்திக்கும். அவனும் யாண்டுங் காரியந் தோன்றுதலி விபு பமமகற் பரிமாணவானெ று பொருள். விபுத்துவத்தால் அவற்கு நித்திய அநுமாநம் வியோமம் போல. சுகமுதலிய வேறு பாட டா லுடம்பு பே றும் வேறுபாடுடையான்

2. சரீரம்.

அவனு குப் போக நிலம் உட ம்பு. இன்ப துன் ப அநுபவம் போ ம் அது எதனோடு கூடிய ஆன் மாவிற் றோ றும் அது போக நிலம்; அதுவே ச ரீரம் சேட்டாசிரயமுட ம்பெனினுமாம். சேட்டை, இதமகிதமடைதற் பரிகரித்தற்பொருட்டுப் புடை

பெயர்தல். புடைபெயர்தன் மாத்திரை யன்று.

3. இந்திரியம்

உடம்போடு சையுத்தமாய ஞாந ரணமான அதி ந்திரிய மிந்திரியம். "அதீந்திரிய மிந்திரியம்" என் று கூறிற் காலாதியினு மிந்தியத்துவம்வரல்வேண் டும். ஆதலில் "ஞாநகரணமான" என்று கூறப்பட் டது அங்ஙனமாயினும், பொரு ளிந்திரிய சந்நிக ர்ஷ முதலியவற்றினும், இந்திரியத்துவம் வரல்வே ண்டும் ஆதலின் "உடம்போடு சையுத்தமாய" எ ன்று கூறப்பட்டது "உடம்போடு சையுத்தமாய ஞாநகரணம் என்று கூறில், ஆலோ த்தினும் இந் திரியத்துவம் வரல்வே டும். ஆதலில் "அதீந்திரிய ம்' என்று கூறப்பட்டது.

அவ்விந்திரியங் ளும் ஆறு; கிரா ம், இரசநம், சட்சு, துவக்கு, சுரோத்திரம், ம ம் என்பனவே அவற்றுள் கந்தந் தோன்றுதற் சாதந இந்திரியங் கிராணம்; மூக்கு நுனியினிருப்பது அதுவும் பிரு துவிமயம். கந்தமுடை மயின்; கந்தமுடை மயு ங் கந்தங் கவர்வதால் எவ்விந்திரியம், உருவாதி யைந்தினுள் எக்குணத் தக் கவரும் அவ்விந்திரிய ம் அக்குணத்தோடு கூடியது. எங்ஙனம், சட்சு ரூப கவர்வது; உருவத்தையுடையது; அதுபோலக் கிராணங் ந்தத்தைக் கவர்வது மதனுற் கந்தத்தை யுடையதுமாம். இரசத் தோற்ற சாதந இந்திரிய மி ரசநம்' நா நுனி யிருப்பது; அதுவு மப்புமயம்; ரூ பாதி யந்தினு ளிரதத்துக்கே யபிவியஞ்சகமாத லில்' வாய்நீர் போல. ரூபந் தோற்ற சாதந இந்தி

ரியஞ் சட்சு; ண்மணி நுனியி னிருப்பது; அதுவு ந் தேயுமயம். ரூபாதி யைந்தினுள் ரூபத்தி ற்கே யபிவியஞ்ச மாதலில் விளக்குப் போல பரி சத் தோற்ற சாதந இந்திரியந் துவக்கு; உடம்பெ லாம் வியாபி. அதுவும் வாயுமயம் ரூபாதி ஐந்தி னுட் பரிசத்திற்கே பபிவியஞ்சகமாதலின்; சரீர வியர்வத் தண்மை யபி வியஞ்ச மான விசிறிக் காற் றுப் போல சத்தத் தோற்ற சாதந இந்திரியஞ் சோத்திரம். அது செவியோடு கூடிய ஆகாயமே. (வறு பொருளன்று; சத்த குணத்துவத்தால். அ துவுஞ் சத்தங் கிரகித்தலின். எவ்விந்திரியம் ரூபா தியைந்தினுள் எக்குணத்தைக் கவர்வது, அது, அ க்குணத்தோடு கூடியது. எங்ஙனம்? சட்சு முதலி யவைகள், சத்தங் கிரகிப்பது சுரோத்திரம் ஆதலி ன், அது சத்தகுணமுடையது அற்றாயின் சட்சுமு தலிய இந்திரிய முண்மையின் யாது பிரமாணம்? கூறுதும்; அநுமாநம். ரூபாதி ஞானங்கள் கரணசா த்திய கள் கிரி யயாதலின் துணித்தற் கிரியை போ

4. அருத்தம்.

அருத்தங்கள், ஆறு பதார்த்த ள் அவை திரவி யம் குணம், கருமம், சாமாநியம், விசேடம், சமவா யமென்பனவே.

பிரமாண முதலியன ஈண்டே யடங்குவனவாயி னும் பயன்படல்வசத்தாற் பேதமாகக் கூறப்படும்

திரவியம்

அவற்றுள் சம ாயிகாரணந் திரவியம்

அத் திரவியங்களும் பிருதிவி, அப்பு, தேயு, ாயு ஆகாயம், ாலம், திக்கு, ஆன்மா, மநம் ா ர ஒ பதே

அவற்றுட் பிருதிவித்து சாமானியமு ட பிருதிவி யது பிருதிவி. வண ம மென் ம முதலி ய அவயவ சையோ விசேடத்தோடு கூடி து; இராணம், உடம்பு, மட்பி டம் கல், மரமு த-ிய -ருவமுடையது. கந்தம் ருபம் இரதம் ப ரிசம் சங்கியை, பரிமாணம், ே முதல் கூடல் பி ரி ல், அண்மை, சேய்மை, கு த்துவம், திரவத்து ம், சம்ஸ்காரமுடையது. அது ம் நித்த அநித்த பேதத்தால் இரு வகை பரமாணு ரூபம் நித்தியம் காரிய ரூபம், அநித்தியம் ருதிவியினு டய ரூப ரச ந்த பரிசங ள் அநித்தியங்கள், பா த்தாற் றொன்றி னை; பாகந் தேயு சையோகம் ஆதலிற் பி ருதிவியினது மு னர் ரூப முதலியன ம டும் மற் றையன பிறக்குமென்பது பாக , ற்றோன்று

அப்புத்தன்மைச் சாமானியமோடு கூடிய அப்பு , ப்பு. இரசந இந்திரியம் ஆறு, ட , ப னி, ஆலி முதலிய உருவமு டயது; ந்த மின்றிச் சிநேகமோடு கூடிய மு சொன்ன கு முடையது; நித்த அநித்தமுமாம் நிதநம் பரமா ரூபம், அநித்தங் ாரிய ரூபம் நித்திய ரூ டய ரூபாதி நித்தியங்கள்.

தேயுத்தன்மைச் சாமானியமு டயது தேயு. தே யு சட்சு, ஞாயிறு, பொன், தீ, மி முதலிய வேறுபாடுடையது ரூபம் பரிசம் ச ங

மை, பரிமாணம் பிரதக்த்வம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவம் சம்ஸ்காரமுடையது. நித்த அநித்தமும், முன்போல அது உற்பூத ரூப பரிசம், அநுற்பூத ரூப பரிசம், அநுற்பூத ரூப உற்பூத பரிசம், உற்பூத ரூப அநுற்பூத பரிசமென்று நால்வகை

உற்பூதரூப பரிசம் எங்ஙனம்? பிண்டத் தேயுவான தீ முதலியன உற்பூத அபிபூத ரூப பரிசம் அநுற்பூத ரூபமென்னிற் கட்புலப்படாமை வேண்டும்; அநுற்பூதபரிசமென்னிற் பரிசத்தாற் கிரகிக்கப்படாமை வேண்டும் அபிபவம் வலியதாகிய தன் சாதியான பிருதிவி சம்பந்தப் பரிசத்தாற் பண்ணப்படுமே. அநுற்பூத ரூப பரிசத் தேயு எங்ஙனம்? சட்சிந்திரியம். அநுற்பூத ரூப உற்பூத பரிசம் எங்ஙனம்? வெந்நீரிற் றேயு. உற்பூத ரூப அநுற்பூத பரிசம் எங்ஙனம்? விளக்கினொளி மண்டலம்.

வ ட வாயுத்துவசம்பந்தமுடையது வாயு. துவக்கிந்திரியம், பிராணன், காற்று முதலியபேதமுடையது; பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்த்துவம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், விரைவுடையது. அதுவும் பரிசத்தால் அநுமேயம். அங்ஙனமன்றே, வாயு வீசுகையில் வெம்மை தண்மையில்லாத பரிசம் யாதொன்று தோன்றுகின்றது அது குணமாதலிற் குணியை அநுமாபிக்கும் குணியும் வாயுவே; பிருதிவி தோன்றாமையின். பிருதிவி வாயுவல்லதற்கு வெம்மை தண்மையில்லாத பரிசமின்மையின். அதுவுந் நித்த அநித்த பேதத்தால் இருவகை. நித்தியம் பரமாணு

ரூப வாயு; அநித்தியங் காரிய ரூப வாயு

தோற்றமும் அழிவும்

அவற்றுட் காரியமான பிருதிவியாதி நான்கிற்கு முற்பத்தி நாச முறையே கூறுதும். இரண்டு பரமாணுக்களது வினையாற் சையோகமுண்டாகையிற் றுவியணுகந் தோன்றும். அதற்குப் பரமாணுக்கள் சமவாயிகாரணம்; அவற்றது சையோக மசமவாயி காரணம்; அதிட்டாதி நிமித்தகாரணம். துவியணு கங்களது வினையாற் சையோகமுண்டாகையிற் றி ரியணுகந் தோன்றும். அதற்குத் துவியணுகங்கள் சமவாயிகாரணம். ஒழிந்தன முன்போல. இங்ங னம் திரியணுகங்களாற் சதுரணுகம், சதுரணுக ங்களாலபரதூலம், அவற்றாற் றூலதரம் தூலதர ங்களாற் றூலதமம். இங்ஙன முறையான மகாப்பி ருதிவி மகா அப்பு, மகா தேயு, மகா வாயு தோன் றும். காரியத்தை யடைந்த ரூபாதிகள் தங்கட் கி டமான சமவாயிகாரணத்தை யடைந்த ரூபாதி களாற் றோன்றும்; காரண குணங்கள் காரியகுணங் களைத் தோற்றுவிக்குமென்னு நியாயத்தால் இங் ஙனந் தோன்றிய ரூப முதலியவுடைய காரியத்திர வியமாகிய குடமுதலியவற்றிற் கவயவமான கபா லமாலாதியிற் றள்ளுதலொன்றாயினும். புடைத்தலா யினும் வினை தோன்றும் அதனால் விபாகம் அத னால் அவயவியைத் தோற்றுவிப்பதான அசம வா யிகாரணமான சையோகத்திற்கு நாசம்பண்ணப்ப டும். அதனாற் காரியத் திரவியமான அவயவியா ன குடமுதலியவற்றிற்கு நாசம் இங்ஙன மசமவா யிகாரண நாசத்தாற் றிரவியநாசங் காட்டப்பட்ட

ஞ. ஓரிடத்துச் சமவாயிகாரண நாசத்தாற் றிரவியநாசம். எங்ஙனம்? முற்கூறிய பிருதிவியாதிகளுக்குச் சங்காரத்திற் சங்கரிக்கவேண்டி மகேசனுடைய சங்கரித்தல் வேட்கையால், அணுக்களில் வினை, அதனால் விபாகம், விபாகத்தாற் சையோகநாசம்; துவியணுகங் கெடுகையில் ஆசிரயக் கேட்டாற் றிரியணுகாதி நாசம். முறையே பிருதிவியாதி நாசம். எங்ஙனம்? நூற்கேட்டின் ஆடைகெட்டு அதனையடைந்த ரூபாதிகளுக்குத் தனதாசிரயக்கேட்டானே கேடு. வேறாயின், ஆசிரய மிருக்கையிலே மாறுபட்ட குணமடைதலாற் கேடு; எங்ஙனம்? பாகத்தாற் குட முதலியன ரூபாதிநாசமென்க

பரமாணு * சற்பாவத்துக்குப் பிரமாணம்யாது? கூறுதும் சாளர வெயிற்கண்ணதாகிய எல்லாவற்றினு நுண்ணியதியாதொன்று தோன்றும் அது தன்னி னுண்ணியதாகிய பரிமாண திரவியத்தாற்றோன்றியது காரியத் திரவியமாதலில் குடம்போல அத்திரவியமுங் காரியமே; பெருந் திரவியத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரியத்துவ நியமத்தால் ஆதலின் இங்ஙனந் துவியணு மென்னும் வேறு திரவியஞ் சித்தம். அதுவுந் தன்னி னுண்ணியதாகிய சமவாயிகாரணத் திரவியத்தாற் றோன்றும் காரியத்திரவியமாதலில்; குடம்போல யாது துவியணுகத்தைத் தோற்றுவிப்ப ததுவே பரமாணு அதுவுந் தோன்றாததே அற்றாயின், காரியத் திரவியத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரியத்துவ நியமமாதலின்.

அது தோன்றுந தெங்ஙனம்? கூறுதும். எண்ணி றந்தகாரிய பரம்பரை யநவஸ்தா தோஷம்வருதலி ன், இங்ஙனமாயிற், பல திரவியத்தாற் பிறத்தல் விசேடமின்மையின். மேரு கடுகுகட்குத் துல்லிய பரிமாணத்துவம் வருதலின், ஆதலிற் றோன்றுததே பரமாணு. துவியணுகம் இரண்டு பரமாணுக்களாலே தோன்றும்; ஒன்றற்குத் தோற்று வியாமை நியமமாதலின், மூன்று முதலிய கற்பனையிற் பிரமாணமின்மையின், திரியணுக மூன்று துவியணுகங்களாலே பிறக்கும்; ஒன்றற்குத் தோற்றுவியாமை நியமமாதலின், இரண்டாற் றொன்றிற் காரியத்தை யடைந்த மகத்வந் தோன்றுமை வரல்வேண்டுதலின் காரியத்தின் மகத்துவங் காரணத்தின் மகத்துவத்தானாவது காரணப் பன்மையானாவதன்றே? அவற்றுள் முதலதின்மையின் ஈற்றது வேண்டத்தக்கது; நான்கு முதலிய கற்பனையிற் பிரமாணமின்மையின் மூன்றனை மகத்துவந் தோன்றுதல் கூடுதலின்

ஆகாயம் — சத்த குணமுடையதாயும் சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகமுடையது; ஏகம்; விபு; நித்தியம், சத்தலிங்கமுடையது அதற்குச் சத்தலிங்கமெங்ஙனம்? பாரிசேடத்தால்; அங்ஙனமன்றே சத்தங் குணம்; சாமாநியமுடையதாய் நம்மனோர் புறவிந்திரியமொன்றாற் கிரகிக்கப்படுதலின்: ரூபாதி போல. குணமுங் குணியைப்பற்றியதே. அதற்குப் பிருதிவியாதி நான்கு மான்மாவுங் குணியாகத்தகா; சத்தஞ் செவியாற் கிரகிக்கப்படுதலின் யா

வை, பிருதிவியாதி கு ங்கள்? அவை சுரோத்தி
ரேந்திரியத்தாற் கிரகிப்பன அல்ல. எங்ஙனம்? ரூ
பாதிகள். சத்தஞ் சுரோத்திரேந்திரியத்தாற் கிரகி
க்கப்படும் திக்குக் கால மனங்களது குணமன்று
விசேடகுணமாதலின். ஆதலின் இவ்வெட்டினின்
றும் வேறு ச் சத்தத்திற்கு குணியநுமிக்கப்படும்
அதுவே யாகாயம். அதுவும் ஒன்று; பேதத்திற்பி
ரமாணமின்மையின், ஒருமையாற் கூறுதலின், ஒரு
மையாதலின் ஆகாயத்துவமென்னுஞ் சாமானியம்
ஆ ாயத்திலில்லை; சாமானியம் பலவிடத் திருத்தலி
ன். ஆக யம் விபு-பரமமகற்பரிமாண முடை யதெ
ன்று பொருள்; எல்லாவிடத்து 5 காரியந் தோன்
றுதலின். விபுத்துவத்தா னித்தியம்.

காலந் திக்கின் வேறு பரத்துவா
காலம். பரத்துவத்தால் அநுமேயம். சங்கியை
பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், வி
பாகமுடையது; ஒன்று; நித்தியம்; விபு அதற்கு

த் திக்கின் வேறான பரத்து பரத்துவத்தால் அ
நுமேயத்துவம் எங்ஙனம்? கூறுதும், அ யனை
யண்மையா பரத்துவத்திற் கருகனை முதியோ
ன் கண் வேறான பரத்துவந் தோ றும் சேயனை
ய்ச் சேய்மையாற் பரத்துவத்திற் கருகனை இளை
யோன் கண் வேறான அபரத்துவந் தோற்றும். இ
திற் றிக்கின் வேறான பரத்துவமு மபரத்துவமுங்
ாரியமாய்த் திக்கு முதலிய காரணமுண்டாகாமை
யிற் காலமே ாரணமென்றநுமிக்கப்படும் அஃது
ஒ றுயினும் நிகழ் விறப் பெதிர்வு வினையுபாதி ய

சத்தான் நிகழ்வு முதலிய *வியபதேசத்தை யடையும் புருடனைப் போல; அவற் கடிதன்முதலிய வினையுபாதிவசத்தான் மடையன் முதலிய வியவதேச மடையும் இதற்கு நித்திய விபுத்துவங்கண் முன்போல.

திக்கு. திக்கு ஒன்று; நித்தியம்; விபு; சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகமுடையது அதுவுங், கிழக்கு முதலிய ஞாநங்களா லநுமேயம்; அவற்றிற்கு வேறு நிமித்தமின்மையின் கிழக்கினும் மேற்கினும் பொருளாண்டேயிருத்தலின். அஃது ஒன்றாயினும் தன் ற றேச சையோக வுபாதி வசத்தாற் கிழக்கு முதலிய பெயர்களை யடையும்

ஆன்மா. ஆன்மத்துவ சாமாநியமுடைய தான்மா. சுக துக்கமுதலிய வேறுபாட்டாற் பலவே. அதுவுங் கூறினும். அதற்குக் குணங்கள், சங்கியை முதலிய ஐந்தும் புத்தி முதலிய ஒன்பதும் அதற்கு நித்தியத்துவ விபுத்துவங்கண் முன்போல.

மநம். மநத்துவ சாமாநியமுடையது மநம். அணு பரிமாண சையோகி அகவிந்திரியம் மநம். இன்ப முதலிய உபலத்திக்குக்கரணம். சங்கியை முதலிய ஐந்து குணமுடையது பரத்துவம், அபரத்துவம் வேகமுடையது. இந்த மநசையோகத்தாற் புறவிந்திரியம் புறப்பொருள் கிரகிப்பது. அதனானே யெல்லா உபலத்திக்குஞ் சாதநம். அதுவு காட்சியன்று; மற்றென்னெனின் அநு

மாநத்தாற் றோன்றுவது அங்ஙனமன்றே, இன்ப முதலிய உபலத்திகள் கட்புல முதலிய அல்லாக் கரணத்தாற் சாதிப்பன, கட்புல முதலிய இன்றியுந் தோன்றலின், யாது கரணம் அது மநம். அதுவும் அணுபரிமாணம்

திரவியங்கள் கூறினும்; குணங்கள் கூறுதும்.

குணம்.

சாமாநியமுடையது, சமவாயிகாரணம் அல்லது, வினையல்லது, குணம். அதுவும் பொருளைப் பற்றியது; ரூபம், ரசம், கந்தம், பரிசம், சங்கியை பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம் திரவத்துவம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்நம், தருமம், அதருமம், சம்ஸ்காரம் என்னும் பேதத்தா லிருபத்துநான்கு குணமாம்.

உருவம. அவற்றுட் கட்புல மாத்திரையாற் கிரகிப்பது ரூபம் சாதியுடையது; விசேட குணம்; பிருதிவி முதலிய மூன்றன்கணிருப்பது. அதுவும் வெண்மை முதலிய பல பிரகாரம்; பிருதிவியிற் பாகசரூபம்; தேயுவில் அபாசக வெண்மையொளி; அப்புவி லொளியில்லாத அபாசக வெண்மை

இரச°. இரசம் இரசநேந்திரியத்தாற் கிரகிக்கப் படுவது; விசேட குணம்; பிருதிவி புனல் களிலிருப்பது. அவற்றுட் பிருதிவியின் மதுர முதலிய அறுவகைப் பாகசமும், அப்புவின் ம

தார மபாசகமும் நித்தியாநித்தியமாம்; நித்தியப் பரமாணுவான அப்பு நித்தியங் காரியமான அப்புவிலென்க.

ந்தம. கந், ங், ஙிரா ரத், ரற் ருங் குணம் பிருதிவிமா த்தி ரயினிருப்பது அது நறு நாற்றந் தீநாற்றமென் றிருவ புனன் முதலியவற்றிற் ந்தந்தோன்ற சயுத்தசமவாய த்தா லென் றறியத்தக்கது

பரிசம. பரிசந், துவக்கிந்திரியத்தான் மாத்திரங் கிரகிக்கப்படுவது. பிருதிவியாதி நான்கினி ருப்பது. அது தண் ம, ம்மை தண் மை வெம்மை யில் தென்னும் பேதத்தான் மூவ வ ;த ட நீரில். வெம்மைதீயில் தண்மை வெ ம்மை யில்லது பிருதிவி வாயுக் ளில் இவ்வுருவா தி நான்கும் ம த்துலத்தோ டொருபொருளிற் சமவேதித்துக்கொ ண்டு ற்பூதங்களாயே காட்சிகள்

ச ங்கி ய. சங்கியை, ஒருமை முதலிய வியவகாரத் தின் கார ம் சாமானியகுணம் -ஒன்று முதற் பரார்த்தமளவுப். அவற்றுள் ஒருமை இருவகை; நித்த அநித்த பேதத்தான் நித்தியத்தை யடைந்தது நித்தியப். காரியத்தையடைந்த தநித்தியம் தன தாசிரய சமவாயிகாரணத்தை யடைந்தவொருமையாற் றோன்றுவது இருமைய நித்தியமே. அதுவும், இரண்டு பிண்டங்களில் இது தொன்றிம் தொன்றென்னு மவா தற் கருத்தாற் றோன்றும் அவற்றுட், பிண்டங்கள் சமவாயி காரணம் பிண்டங்களி லொரு மக ளசமவாயி காரணம் அவாவுதற்கருத்து நிமித்த ாரணம் அ

வாவுதற்கருத்து நாசத்தானே யிருமைநாசம். இங்ஙன முடிமை முதலிய தோற்றம்.

பரி — பரிமாணம், அளவு யென்வியவகாரத்தின் காரணம். அது அணு, மகத்து, நெடில், குறில் என நான்கு வகை. இன்னும் அது நித்த அநித்தபேதத்தா லிருவகை. நித்தியத்தை அடைந்தது நித்தியம். காரியத்தை யடைந்தது அநித்தியம். காரியத்தை யடைந்த பரிமாணங் காரணத்தை யடைந்த சங்கியாயோநி, பரிமாணயோநி பிரசயயோநி; அவை யெங்ஙனம்? துவியணுகபரிமாண மீசுவர னபேட்சாபுத்தியாற் றோன்றிய பரமாணு இருமையாற் சங்கையாற் சங்கியா யோநி சங்கியாகாரணமென்று பொருள். திரியணுகபரிமாணமுந், தனதாசிரய சமவாயிகாரணத்தை யடைந்த பன்மைச் சங்கியாயோநி. சதுரணுகாதி பரிமாணந் தனதாசிரய சமவாயிகாரண பரிமாணத்தாற் றோன்றியது. பஞ்சிந் திரட்சி பரிமாணந் தனதாசிரய சமவாயிகாரண அவயவங்களது பிரசிதில சையோகத்தாற் றோன்றியது. பரமாணு பரிமாணமு மாகாயாதியைபடைந்த பாரிமாண்டல்ய மென்னும் பரமமகற் பரிமாணமு நித்தியமே.

பிரதக்தவ — பிரதக்த்வம் வேறென்னும் வியவகாரத்தின் காரணம்

சயோக — சையோகஞ் சையுக்தவியவகாரத்தினேது இரண்டன்கண்ணது அவ்வியாப்பிய விருத்தியது. அது வேறு வினையாற்றோன்றியது, இரண்டன் வினையாற் றோன்

றியது சையோகத்தாற் றோன்றியதென மூவகை. அவற்றுள் வேறுவினையாற் றோன்றுவதெங்ஙனம்? வினையுடைய பருந்தோடு வினையில் குற்றிக்குச் சையோகம் அதற்குப் பருந்தின் வினை யசமவாயிகாரணம். இரண்டன் வினையாற் றோன்றுவதெங்ஙனம்? வினையுடைய மல்லரது சையோகம். சையோகத்தாற் றோன்றுவதெங்ஙனம்? காரண அகாரண சையோகத்தாற் காரிய அகாரிய சையோகம் எங்ஙனம்? கைத்தரு சையோகத்தால் மெய்த்தருசையோகம்.

விபாகம

விபாகம் பிரிவின் வியவகாரஏது. சையோகமுதற்று யிரண்டன்கண் ணிருப்பது. அது வேறுவினையாற் றோன்றியது, இரண்டன்வினையாற் றோன்றியது, விபாகத்தாற் றோன்றியதென மூவகை. அவற்றுண் முதலதெங்ஙன்? மலையினின்று மெழும் பருந்தின் வினையாற் பருந்தொடு மலைக்கு விபாகம். இரண்டாவதெங்ஙன்? தகர்களது விபாகம் மூன்றாவதெங்ங? கைத்தரு விபாகத்தான் மெய்த்தருவிபாகம்.

பரத்துவம
அபரத்துவ

பரத்துவாபரத்துவங்கள், பர அபர வியவகாரத்தின் காரணங்கள் அவை திக்கான் வந்தவுங் காலத்தான் வந்தவுமென இருவகைய.

அவற்றுட் டிக்கான் வந்தவற்றது தோற்றங் கூறுதும்.

ஒரு திசையிலிருக்கும் பிண்டங்களில் இஃதகணி னணித்தென்னும் புத்தியால் அநுக்கிரகிக்கப்பட்

டதிக்குப் பிண்ட சையோகத்தால், அபரத்துவம் அணியதன்கட்டோன்றும்; சேய்மைப் புத்தியாற பரத்துவம் சேயதன்கட் டோன்றும் பிண்டத்தினுடைய அண்மை காண்பவனதிடம் பபேட்சையினாற் சையுக்த சையோக அற்பீயத்துவம்; அவற்றிர *பூபத்துவஞ் சேய்மை

காலத்தான் வந்த பரத்துவாபரத்துவங்களது தோற்றங் கூறுதும்

நியமமல்லாத திக்கினிருக்கின்ற இளையோன்மூத்தோனுடைய பிண்டங்களில் இவனவனி னற்பகால சம்பந்த னென்னு மிவ்வகை யவாவுதற் புத்தியால் அநுக்கிரகிக்கப்பட்ட கால பிண்டங்களினுடைய சையோகத்தா லிளையோன் னபரத்துவந் தோன்றும் இவன் அவனின் மிகுந்த கால சம்பந்தமுடையனென்னும் புத்தியான் மூத்தோன்கட் பரத்துவந் தோன்றும்

குருத்துவம் — குருத்துவம், முதல்வீழ்தலி னசமவாயிகாரணம் பிருதிவி புனல்களி னிருப்பது. சையோகம் வே முயற்சியின்றி குருத்துவத்தால் வீழ்தலுளதென்று கூறப்படும்.

திரவத்துவம் — திரவத்துவம் முதலொழுகுதலி னசமவாயிகாரணம்; நிலந் தேயு நீரினிருப்பது திரவத்துவம், நிலந்தியான நெய் பொன்களுக்குத் தீ சையோகத்தாற் றிரவத்துவமாதலின் நைமித்திகத் திரவத்துவம். நீரின், இயற்கைத் திரவத்துவம்

சிநேகந் திரட்டுதலினேது நீரின்மாத்
சிநேகம் திரமிருப்பது காரண குணமுதற்று; கு
ருத்துவமுதலியபோலப் பொருணிற்குந்
துணையுநிற்பது

சத்தஞ் செவிப்புலனாற் கவர்வது; ஆ
சத்தம் காய விசேட குணம்

அற்றாயின் அதற்குச் செவிப்புலனாற் கிரகிக்கப் படுத லெங்ஙனம்? யாண்டாயினு முரசு முதலிய இடத்திற் சத்தந் தோன்றும் செவிப்புலன் புருடனிடத்தே இருக்கும்

அஃதெங்கும்; முரசிடத்தே தோன்றிய சத்தம் வீசிதரங்க நியாயத்தாற்றான், கதம்பமுகுள நியாயத்தாற்றான் றனக்கணித்தான சத்தந் தோற்றுவிக்கும் சத்தமுஞ் சத்தாந்தரந் தோற்றுவிக்குமென்னுமுறைமையாற் செவிப்புலனிடத்தே யிறுதிச்சத்தந்தோன்றும். அவ்விறுதிச்சத்தஞ் செவிப்புலனாற் கிரகிக்கப்படும் முதலது நடுவதுமல்ல

இங்ஙனம் வேய் பிளக்குங்கா லிரு பிளவி னீக்கத்திற்றோன்றிய சத்தஞ் சத்தாந்தரந் தோற்றுவிக்கு முறையானே செவிப்புல னிறுதிச்சத்தந் தோன்றும் அவ்வீற்றிற் சத்தஞ் செவிப்புலனாற் கவரப்படும்.

முரசொலி யென்றாற் கேட்கப்பட்ட தென்னும் புத்தி யீண்டுப் பிராந்தியே முரசொலி தோன்றுமை யின் முரசாகாய சையோகமசமவாயிகாரணம் முரசு குணிற் சையோக நிமித்த காரணம். வேய் பிளத்தலாற்றோன்றிய சட சட வொலித் தோற்றத்தின், வேய் பிள வாய் சையோக மசமவாயி கார

ணம், இருபிளவினக்கு நிமித்தகாரணம். இங்ஙனமு
தலொலி சையோகத்தாற் றோன்றியதும் விபாகத்
தாற் றோன்றியதுமாம். முதல தொழிந்திடு மொ
லிகள் சத்தத்தை யசமவாயிகாரணமாகவுடை யன.
அநுகூலவாயு நிமித்தகாரணம். சையோகத்தால் வி
பாகத்தாற் சத்தத்தாற் சத்தந் தோன்றுமென்று
மிருந் கூறினர். முதலது முதலான எல்லாச் சத்
தங்களுக்கு மாகாயமே சமவாயிகாரணம். வினை பு
த்திபோல முக்கணமாத்திர அவத்தையது. அவற்
றுண் முதனடு வொலிகள் காரிய சத்தத்தாற் கெ
டும். ஈற்ற தீற்றயலா லீற்றய லீற்றாற் சுந்தோபசு
ந்த நியாயத்தாற் கெடுமென்பது பொருந்தாது;
முக்கண வவத்தையான வீற்றதுடைய இரண்டாங்
கணத்தி லிருப்பதான மூன்றாங் கணத் தில்லையான
ஈற்றயலா லீற்றுக்கேடு தோன்றில் பொருந்தாமை
யின் ஆதலி னீற்றயற் கேட்டானே யீற்றுக்கேடு.
சத்தத்தின் கேடநுமாநத்தால். அங்ஙனமன்றோ?
சத்த மநித்தியம்; சாமானியமுடையதாய் நம்மனோ
ர் புறவிந்திரியத்தாற் கவரப்படுதலின்; குடம்போ
ல இதிற் சத்தத்தினுடைய அநித்தியத்துவஞ் சா
த்தியம்; அநித்தியத்துவமும் விநாசத்தோடு கூடிய
சொருபத்துவம் விநாசத்தோடுகூடியசத்தை பொ
ருந்தாது; சத்தையில்லாத பிராகபாவத்தில் அநித்தி
யத்துவ மின்மை வரல்வேண்டுதலின் சாமானிய மு
டையதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கிரகிக்க
ப்படுத லேது இந்திரியத்தாற் கிரகிக்கப்படுதலெ
ன்று கூறி லண்மாரின் வியபிசாரம்வருதலின் புற

விந்திரியமென்று கூறப்பட்டது. யோகி புறவிந்திரியத்தாற் கவர்வதான அதனோடு வியபிசாரம் வருதலின் அதை விலக்கும்பொருட்டு நம்மனோரென்று கூறப்பட்டது. யோகியுண்மையிற் பிரமாணம் யாது? கூறுதும்: பரமாணுக்க ளொருவர்க்குக்காட்சி; பிரமேயமாதலின், குடம்போல, யாவன் பரமாணுவைக் காண்பா னவனே யோகி. அங்ஙனமாயினுஞ் சாமாநியாதிகளோடு வியபிசாரம் வருதலின் சாமாநியமுடையதாய் என்று கூறப்பட்டது. சாமாநிய முதன்மூன்றுஞ் சாமாநியமுடையவல்ல.

புத்தி பொருள் விளக்கம் புத்தி.

சுகம் பிரீதி சுகம்; அது, எல்லாரானு மநுகூலமாக அறியத்தக்கது.

துக்கம் பீடை துக்கம், அது, எல்லாரானும் பிரதிகூலமாக அறியத்தக்கது.

இராகம் இராகம், இச்சை.

துவேஷம் குரோதந் துவேஷம்.

பிரயத்நம் ஊக்கம் பிரயத்நம்.

புத்தியாதி யாறும் மாநதக் காட்சி.

தருமம் அதருமம் தருமாதருமங்கள் சுக துக்கங்களுக் கசாதாரண காரணங்கள். அவை காட்சியல்ல; அநுமிக்கப்படும். தேவதத்த னுடம்பு முதலிய தேவதத்தன் விசேட குணத்தாற் றோன்றியன; காரியமாய்த் தேவதத்தனுக்குப் போக ஹேதுவாதலின். அது தேவதத்தன் முயற்சியாற் பிறந்த பொருள் போலும். யாதுடம்பு முதலியவற்றைத் தோற்றுவிப்பதா ஆன்ம விசேட குணம்,

அதுவேத ரூபமும், அகருமமும்; முயற்சி முதலிய
ன உடம்புமுதலியவற்றைத் தோற்றுவியாமையின்.

சம்ஸ்காரம் சம்ஸ்காரம்: வேகம், பாவனை, திதித்
தாபகமென மூவகை.

அவற்றுள் வேகம், பிருதிவி முதலான்கினு மூ
த்திலுமிருப்பது; வினைக்கேது.

பாவனையென்னுஞ் சம்ஸ்காரம், ஆன்மாவின் மா
த்திரையாயிருப்பது அநுபவத்தாற் றோன்றியது,
நினைவிற் கேது. அதுவு மெழுந்தே நினைவைத்தே
ற்றுவிக்கும். எழுதல் துணையுண்டாதல்; சம்ஸ்கா
ரிக்குந் துணைகள் ஒப்புமைகாண்ட முதலியன.

ஒப்புத் திருஷ்டஞ், சிந்தைமுதலியன உள்ளுதல்
வித்தையுணர்த்துவனவாமென்று பிறருங் கூறினார்.

திதித்தாபகம் பரிசம்போல விசேடித்திருப்பது,
தனக்கிடமாய் வேறொரு வடிவமான தனுமுதலியவ
ற்றிற் கந்நிலைமையை மீட்டு மடைவிப்பது. இப்புத்
தி முதற்றருமா தரும மீறானவையும் பாவனையும் ஆ
ன்மவிசேட குணம்.

குணங்கள் கூறினும். கருமங் கூறுதும்.

கருமம்.

புடைபெயர்ச்சி கருமம்; குணங்கள்போலத் திர
வியமாத்திரத் திருப்பது; மூர்த்தத்துவ பரியாய
நாமமுடைய விபுவல்லாத பொருளின் பரிமாணத்
தோடு கூட ஒரு பொருளிற் சமவேதித்திருப்பது;
விபாகவழியான், முதலிடத்திற் சையோக நாசத்
தில்; பின்னிடத்திற் சையோகவேது; எழுதல், வீ

ழுதல், முடக்கல் நீட்டல், நடத்தலென்னுங் கூறுபாட்டால் ஐவகை †சுழறன்முதலியன நடத்தலுள் அடங்கும்.

சாமானியம்.

அநுவிருத்தி ஞானஹேது சாமானியம்; திரவிய முதன்மூன்றினிருப்பது. சாமானியம், நித்தியம், ஏகம், அநேகாநுகதம்.

அதுவும் பரமெனவும், அபரமெனவுமிருவகை அவற்றுட் பரஞ் சத்தை; பலவிடயமாதலின் அதுவும் அநுவிருத்தி ஞானமாத்திரஹேதுவாதலிற் சாமானிய மாத்திரம், அபரந் திரவியத்துவ முதலிய; அற்ப விடயமாதலின். அதுவும் * வியாவிருத்திக்கும் ஏதுவாதலிற், சாமானிய விசேடம். இதில் வியத்தியின் வேறல. சாமானியமில்லென்றொருவன் கூறினால்; இதிற் கூறுதும்: ஆயிற் பின்னமாய் வேறுபட்ட இலக்கணமுடைய பிண்டங்களி னேகாகார புத்தியெல்லாவற்றினு மடைந்த வொன்றனையே யல்லாமல் யாதைப் பற்றி நிற்கும்? அதுவே சாமானியமென்க அற்றேயின் தானல்லதி னீக்கத்தாற் பண்ணப்பட்டதே அவற்றுள் ஏகாகாரபுத்தியாக

† உட்சேபணம், அவட்சேபணம், ஆகுஞ்சநம், பிரசாரணம், கமநமென வடநூலிற் கண்டன இங்ஙன முறையே எழுதல், விழுதல், முடக்கல், நீட்டல், நடத்தலென மொழிபெயர்க்கப்பட்டன.

* வியாவிருத்தி - நீக்கம்.

அங்ஙனமன்றே எல்லா அவயவியினும் அவ்வல்லாத புரவி முதலியவற்றின்கணுமுண்டு; பல அவயவியின் இவ் வேகாகார ஞானம் அவ்வல்லதின்கண் விடயமுடைமையதே பிதிரூபமான ஆத்தன்மை யோக்கியமான சாமானிய விடயமன்றோவெனின், இங்ஙனமன்று; விதிப்புகத்தானே யேகாகாரங்கள் தங்கின்.

விசேடம்.

விசேடம், நித்திய திரவியத்திருப்பது; யோகிருத்தி புத்திமாத்திரத்திற்கேது. நித்தியத் திரவியங்கள் ஆகாய முதலிய வைந்து; பரமாணு ரூபமான பிருதிவியாதி நான்கு.

சமவாயம்

நீக்கமின்றியிருப்பவற்றின் சம்பந்தஞ் சமவாயம் அது கூறப்பட்டதே. அற்றேயின்; அவயவ அவயவிகள் நீக்கமின்றியிருப்பன, ஆதலினவற்றது சம்பந்தஞ் சமவாயமென்பது பொருந்தாது அவயவத்தின் வேறு அவயவி யின்மையின். பரமாணுவன்றோ அங்ஙனம் பல கூடியிது குடமென்று வரப்படும் இதிற் கூறுதும். குடம் பரியதென்னுங் காட்சியுண்டு அது பலவாய்ப் பரியதல்லதாய்; புலப்படாததாகிய பரமாணுக்களிலே யுண்டாகாது

இப் புத்திமயக்கமென்னில், அன்று; வாதமின்மையின்

ஆதலி னிங்ஙனந் திரவியாதி யறுபொருளுங் கூறப்பட்டன. அவை விதிமுகஞானத்தால் அறியப்படுதலிற் பாவரூபங்களே.

அபாவம்.

இப்பொழுது நிடேதமுகப் பிரமாணத்தால் அறிவதாகிய அபாவமான வேழாம்பதார்த்தங் கூறுதும்.

அவ்வபாவம் சமுசர்க்காபாவமெனவும், அந்யோந்யா பாவமெனவும் வகையாலிரண்டு.

சமுசர்க்காபாவம் பிராகபாவமும், பிரத்துவம்சாபாவமும், அத்தியந்தாபாவமுமென மூவகை.

உற்பத்திக்கு முன் காரணங்களிற் காரியமின்மை பிராகபாவம். எங்ஙனம்? நூல்களில் ஆடையில்லை; அஃதநாதி; தோற்றமின்மையின். கெடுவதுங் காரியமே; அதன் கேடாதலின்.

தோன்றிய காரியத்திற் காரணங்களின்மை பிரத்துவம்சாபாவம் கெடுதலென்னுமளவு. எங்ஙனம்? குடமுடைகையி லோட்டிற் குடமில்லை. கோலானடித்தன் முதலியவற்றாற் பிறப்பது அது தோன்றுவதாயினுங் கேடில்லது; கெட்டது மீண்டுந் தோன்றாமையின்.

முக்காலத்து மின்மை யத்தியந்தாபாவம். எங்ஙனம்? வாயுவி னுருவமில்லை.

அந்யோந்யாபாவந் தாதான்மியத்தைப் பிரதியோகியாக வுடைய அபாவம். எங்ஙனம்? குடம் படமன்று இங்ஙனம் அருத்தங்கள் கூறப்பட்டன.

அற்றாயின் ஞானத்திலும் பிரமத்திலும் வேறான

பொருளில்லையெனின் இங்ஙனமன்று; அருந்தங் ர் காட்சியான் மறைக்கப்படாமையின்.

4. புத்தி.

புத்தி, ஞானம், உபலத்தி பிரத்தியயமென்பன முதலிய பரியாயச் சொற்களால் யாது கூறப்படும் அது புத்தி. புத்தி பொருள் விளக்கும். அது அநுபவமும் ஸ்மரணமுமென வகையான் இரண்டு.

அநுபவம் யதார்த்தமும் அயதார்த்தமுமென இருவகை

அவற்றுள் யதார்த்தமாவது அவிசம்வாதகமாய்க் காட்சிமுதலிய பிரமாணங்களாற் றோன்றுவது. எ ங்ஙனம்? குற்றமில்லாத கட்புலமுதலியவற்றாற் குடமுதலிய ஞானம்; புகையை இலிங்கமாகவுடைய தீ ஞானம்; ஆவொப்புமை காண்டலா லாமாவென் னுஞ் சத்தவாச்சிய ஞானம். "சோதிட்டோமத்தாற் றுறக்கம்வேண்டியான் வேட்க" வென்பது முதலிய வாக்கியத்தாற் சோதிட்டோமத்திற்குத் துறக்கசாதநத்து ஞானம்

அயதார்த்த மருத்தத்தை நீங்கினது அப்பிரமாணத்தாற் றோன்றுவது. அது சமுசயம், தருக்கம் விபரியயமென மூவகை. சமுசயதருக்கங்கண் மேற்கூறுதும். விபரீத மதல்லதின் கண் கண்க வர்ச்சி பிரமமென்னு மளவு எங்ஙனம்? முன்னர்த்தோன்றும் வெள்ளியல்லாத இப்பியின் இது வெள்ளியென்று வெள்ளி வருவித்தல்.

ஸ்மரணமும் யதார்த்தமும் அயதார்த்தமுமெ

ன இருவகை. யதார்த்தம் நனவில். கனவிலெல்லா ஞானமும் அயதார்த்த ஸ்மரணம்; குற்றவசத்தால் அதுவென்புழி யிதுவென்பது தோன்றலின். எல்லா ஞானமு நிராகாரமே. ஞானத்தில் அருத்தத்தாற் றனதாகாரந் தோன்றுமென்பதன்று. சாகாரஞான வாத நிராகரித்தலின். ஆதலினானே ஞானாகாரத்தால் அருத்தாநுமானமுந் தள்ளப்பட்டது. கூடமு தலியனகாட்சியாதலின். எல்லாஞானமும் அருத்த, தாற் கூறப்படுவன. அது பொருளோடு கூடியே மநத்தால்அறியப்படுதலின் நான் குடஞானவானென் றிவ்வளவுந் தோன்றும். ஞானமாத்திரவான் நானென்று தோன்றுது.

5. மநம.

அகவிந்திரியம் மநம். அதுவுங் கூறினும்.

6 பிரவிருத்தி

பிரவிருத்தி தருமாதருமங் ள். பிரவிருத்தி ச வியவகாரத்தின் காரணமாதலின்

7. தோட்டம்

தோடம இராகத்துவேஷ மோகங்கள. இராக ம இச்சை த்வேஷம், குரோதம் மோகம், பொய்ம் மையறிவு விபரியயமென்னு மளவு

9. பலம்.

பலம் போகம்; சுக துக்க அநுபவம்.

10. துக்கம்.

துக்கம் பீடை; அதுவுங் கூறினாம்.

11. அபவர்க்கம்.

அபவர்க்கம் மோக்கம். அதுவும் இருபத்தொருவகைத் துக்க முழுதுங் கெடுதல். இருபத்தொருவகை: உடம்பு, ஆறிந்திரியங்கள், ஆறு விடயம், ஆறு ஞானம், சுக துக்க மென்பனவே. இங்ஙனங் கௌண முக்கிய பேதத்தாற் சுகந் துக்கத்தோடு கூடலிற் றுக்கமென் றுபசரிக்கப்படும். கூட்டம் நீங்காதிருத்தல். இவ்வுபசாரம், தேன் விடத்தோடு கூடிற் றேனும் விடக்கூற்றில் வைத்தல் போல. அவ்வபவர்க்க மெங்ஙனமுண்டாமெனிற் கூறுதும். நூலா னறியப்பட்ட யதார்த்த சொரூபமுடையனாய் விடயக் குற்றங் காண்டலால் விரத்தியாய் வீட்டு வேட்கையுடையனாய்த் தியான பரிபாக வசத்தாற் றோன்றின வான்மாவுடையனாய்க் கிலேசநீங்கினவனாய் நிட்காம கருமானுட்டானத்தால் வருவதான தருமாதரும மீட்டாதவனாய் முன்னடைந்த தருமாதருமக்கூட்டத்தை யோகப் பெருமையா லறிந் தொருங்கு நுகர்வானுக்கு முன்னர்க் கரும நிவிர்த்தியி னிகழ்கின்ற உடம்பு நீக்கத்தில், வருமுடம்பின்மையின். இருபத்தொரு துக்கஞ் சம்பந்தமுண்டாகா; காரணமின்மையின். இருபத்தொரு துக்கக் கேடு மோக்

கம். அது, அபவர்க்கம். இனிச் சம்சயங் கூறுதும்.

௩. சம்சயம்.

ஒரு தருமியின் மாறுபட்ட பலபொருண் ஞானஞ் சம்சயம் அது மூவகை.

ஒன்று, விசேடங் காணாதிருக்கையிற் சமான தருமதரிசனத்தாற் றோன்றியது. எங்ஙனம்? குற்றியோ மகனோவென்று முன்னிற்குமொரு பொருளின்கண்ணே குற்றிமை துணிவிக்கும் வளைவு பொந்து முதலியன. மகன்மை துணிவிக்குந் தலை கை முதலியனவென்று விசேடங் காணாதுக் குற்றி மகற் கொத்த வுயர்ச்சி வடிவு காண்பானு மகற்கு, இவ்வுருக் குற்றியோ மகனோவென்று சம்சயமுண்டாம்.

இரண்டாஞ் சம்சயம் விசேடங் காணாதிருக்கையில் விபாதத்தாற் றோன்றுவது. இச்சொல் நித்தியமோ அநித்தியமோவென, ஒருவன் சொல் நித்தமென மற்றொருவன், அநித்தமென்னில்: அவரது விவாதத்தால், விசேடங் காணாத நடுவிருந்த மகற்கு, இச்சொல் நித்தியமோ அல்ல தநித்தியமோவென்று, சம்சயமுண்டாம்.

அசாதாரண தருமத்தாற் றோன்றிய சம்சயமெங்ஙனம்? நித்திய அநித்தியத்தினீங்கின நிலமாத்திரத் திருப்பதான அசாதாரண தருமமான மணமுடைமையால் விசேடங்காணானுக்கு நிலத்தினித்தியாநித்தியத்துவ சம்சயமுண்டாம் அங்ஙனமன்றோ, எல்லா நித்தியத்துவநீங்கின மணமுடைமையோடு கூடுதலின் நிலம் அநித்தியமோ அல்ல

லது எல்லா அநித்தியத்துவ நீங்கின வதனோடு கூ
டுதலின் நித்தியமோவென்று சம்சயம்

௪. பிரயோசனம்.

எதனை வேண்டப்பட்டு மகன் முயலாநின்றான். அது பிரயோசனம். அது சுகமடைதல் துக்கக்கேடு. வாளாவிருப்பாற்கு அதின்பொருட்டன்றோ முயற்சியும்

௫. திட்டாந்தம்.

வாதி பிரதிவாதிகட் குடம்பாட்டு விடயமான அருத்தந் திட்டாந்தம். அது இருவகை ஒன்று சாதருமி திட்டாந்தம் எங்ஙனம்? புகையுடைமை யேதுவின்க ணட்டில். இரண்டாவது வைதருமி திட்டாந்தம் எங்ஙனம்? அவ்வேதுவிற்கே மடு

௬. சித்தாந்தம்.

பிராமாணிகத் தன்மையா லுடம்படு மருத்தஞ் சித்தாந்தம். அது சர்வதந்திரம், பிரதிதந்திரம், அதிகரணம், அபியுபகமமென நால்வகை.

அவற்றுட் சர்வதந்திர சித்தாந்த மெங்ஙனம்? தருமிமாத்திர வுண்மை.

இரண்டாவ தெங்ஙனம்? நையாயிகர்க்கு மநமிந்திரியம். அதுவுஞ் சமாந தந்திரமான வைசேடிகத்திற் சித்தம்

மூன்றாவ தெங்ஙனம்? நில முதலானவற்றின் கருத்தாச் சித்திக்கையி லவனுக்குச்சர்வஞ்ஞத்துவம்.

நான்காவ தெங்ஙனம்? சைமினியினுடைய நித்

தியா நித்திய விசார மெப்படியாயினுமாகச் சத்தங் குணமென்பது.

எ. அவயவம்.

அநுமாந வாக்கியத்தினுடைய ஏகதேசங்களவயவங்கள். அவை பிரதிஞ்ஞை முதலாயினவை. அங்ஙன நியாயசூத்திரமும்; பிரதிஞ்ஞை யேதுவுதாரண உபநய நிகமநங்க ளவயவங்கள்.

அவற்றுட் சாத்தியதரும விசிட்ட தருமிப் பிரதிபாதக வசநம், பிரதிஞ்ஞை. எங்ஙனம்? இம் மலை தீயுடைத்தென்பது.

பஞ்சமியந்தமான லிங்கப் பிரதிபாதக வசநமேது எங்ஙனம்? புகையுண்மையினென்பது.

வியாத்தியோடு கூடின திட்டாந்த வசநமுதாகரணம். எங்ஙனம்? யாது புகையுடைத்து அது தீயுடைத்து; எங்ஙனம்? அட்டில் என்பது பக்கத்தில் இலிங்கத்தி னுபசங்கார முபநயம் எங்ஙனம்? இதுவும் புகையுடையதென்பது. பக்கத்திற் சாத்தியத்தி னுபசங்கார நிகமநம் எங்ஙனம்? ஆகையாற் றீயுடையதென்பது. இப் பிரதிஞ்ஞை முதலைந்தும் அநுமாந வாக்கியத்தின் பஞ்சாவயவங்கள்; அவயவம் போல. அவயவங்கள் சமவாயிகாரணமல்ல; சத்தமாகாயத்திற் சமவேதித்திருக்கையால்

அ. தருக்கம்.

அநிட்டப்பிரசங்கந் தருக்கம். சித்தமான வியாத்தியையுடைய தருமங்களுள் வியாப்பிய வங்கீகா

ரத்தால் வியாபகத்தின் வரவு. எங்ஙனம்? சண்டுக் கடமுண்டாயின் எப்போது நிலம்போலக் காணப்படுமென்பது. இத் தருக்கம் பிரமாணத்துக் கநுக்கிராகம். அங்ஙனமன்றேல் இம்மலை புகையுடையதோ வில்லதோவென்னு மையத்தின் பின், ஒருவன் தீயில்லதென்று கருதின் அப்போதவனைக் குறித்துத் தீயில்லதாயினுனக்குப் புகையில்லதுமாக வேண்டுமென்று புகையில்லாமையின் வரவுபண்ணப்படும். அதுவே தருக்கம்.—அநிட்டப்பிரசங்கமென்றுஞ் சொல்லப்படும். இந்தச் சாத்திய வ்யாபகமான ஆத்தங்கெடுற தர்க்கத்துக்கு விடயம்; தீயில்லாமையைத் தள்ளுதலால். ஆதலில் அநுமானத்துக் கநுக்கிராகம். தருக்கஞ் சமுசயத்திலடங்குமென்றொருவன் சொல்வானேல் அது பொருந்தாது; ஒரு சார்பையுடைய விடயத்தை யுடையதாகையால்.

௯. நிர்ணயம்.

அவதாரண ஞானம் நிர்ணயம். அது பிரமாண பலம்

௰. வாதம்

* தத்துவமறியவேண்டுவோன் கதை வாதம். அது எட்டு நிக்கிரகங்கட் கதிகரணம். அட்ட நிக்கிரகங்களாவன: நியூநம், அதிகம், அபசித்தாந்தம், ஏத்துவாபாச பஞ்சகம்.

று மிச்சையுடையான் கதை யென்பர். அது எல்லா
நிக்கிரகத்தினு நிடைத்திறத்திகாரணம். பராபட்
சத் தூஷிக்கப்படுகையிற் சுபட்ச சாதநமிரேயா
க முடிவாயுள்ளது என்பம்.

௰௨. விதண்டை.

சுபட்ச தாபநமிலாமற் பராபட்ச தூஷணமாத்
திர முடிவாயுள்ள கதை விதண்டை. இவ் வைதண்
டிகனுக்குப் பட்சமில்லை. சொல்வார் பக்ஷமுடை
யதாய்ப் பூர்வோத்தர பட்சத்தைப் பிரதிபாதிக்கு
ம் வாக்கியக்கோவை கதை.

௰௩. ஏத்துவாபாசம்.

சொல்லப்பட்ட பக்கத் தருமத்துவ முதலான
ரூபங்களு ளொரு ரூபத்தாற் குறைந்தாலு மேது
வல்ல. அதுவுஞ் சில ரூப யோகத்தால் ஏதுவைப்
போலத் தோன்ற ஏதுப்போலிகளாம். அவை: அ
சித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரணசமம்,
காலாத்தியாபதிட்டமென்னும் பேதத்தாலைவகை.

1. அசித்தம்

புலத்துள் உதயநனல் "வியாத்தமான ஏதுவி
னுடைய பக்கதருமதையின் ஞானஞ் சித்தி; அத
னுடைய அபாவம் அசித்தி" யென்றசித்த லக்க
ணஞ் சொல்லப்பட்டது, அதுவும் விருத்தமுதலா
னவற்றினு முண்டென்று சாங்கரியந் தோன்றுகி
ன்றது; ஆயினு மெவ்வாறு சாங்கரியமின்றா மவ்
வாறு சொல்லப்படும்: யாதெச் சாதநத்தின் மு
ன்னே தோன்றுந் தோஷ ஞானத்தில் சமர்த்தமா

ம் அதுவே தோடஞானத்தைப் பண்ணும். தூடணமன்றுமனவு; வேறல்ல, முன்னே சொன்ன வகையிலே தோஷ மறிவிக்கப்படுகையிற் கருமுடிவாயின் அந்நியத்துக்குப்போசமின்மையின், பாது வியாதிவியாத்தியாற் றோ ஞானத்தைப்பண்ணுமதுவே விருத்த வேதுப்போலே. பாவை வியபிசாரத்களா லெப்படியாகும். அவை அநைகாந்திக முதலாயினவை. அவைகள், வியாத்தி பக்ஷதர்மத்துவ விசிட்ட ஏதுச சொரூப ஞானமில்லாமையான் முன்சொல்லப்பட்ட அசித்தங்கள்; தோடஞானத்தைப் பண்ணுமென்னு மனவு.

அசித்தம்: ஆசிரையாசித்தம், சொரூபாசித்தம் வியாப்பியத்துவாசித்தமென மூன்றுவகை

அவற்றுள் ஏவ்வேதுவுக் காசிரய

ஆசிரயாசித்தம் மறியப்படாதது, ஆசிரயாசித்தம். எங்ஙனம்? ககநாரவிந்தமணமுடையது; அரவிந்தத்தன்மையால்; மடுவிற்றாமரை போல இதிற் ககனாரவிந்தம் ஆசிரயம். அஃது மின்றே கடமநித்தியம், காரியத்துவத்தால்; கடம் போலவென்பது மாசிரயாசித்தம்.

அற்றாயின் ஆசிரயமுண்மையாற் காரியத்துவ ஏதாசிரயாசித்தமன்று சித்த சாதநமாயிற்று. சித்தமான கடத்தின் அநித்தியத்துவத்தைச் சாதிக்கையால்; இங்ஙனமன்று; சொரூபத்தாலொன்றாசிரயமன் றநுமானத்துக்கு மற்றென்னெனில் ஐயம் அநுபலத்தத்திலும் நிச்சிதார்த்தத்திலும் நியாயம் வழங்காது மற்றெவ்விடத்தென்னிலை

ம்பொருளிலேயே என்னுமியாயமிருக்கையிற் கடத்திலே அநித்தியத்துவத்துக் கையமில்லை: நிச்சயத்தினுலே: சொரூபத்தாற் கடமிருப்பினும் அநித்தியத்துவ சந்தேகமின்மையால் ஆசிரயமில்லையென்ப தாசிரயாசித்தம் ஏது அல்லது; இது ஆசிரயமுடைய தன்றென்பதனுல்.

சொரூபாசித்தம். எவ்வேது வாசிரயத்தி றியப்படாதது சொரூபாசித்தம் எங்ஙனம்? சாமாநியம் அநித்தியம்; காரியத்துவத்தாலென்பது. காரியத்துவ வேது வாசிரயமான சாமாநியத்திலில்லை. பாகாசித்தமுஞ் சொரூபாசித்தமே; எங்ஙனம்? பிருதிவிமுதலான நான்கின பரமாணுக்களும் அநித்தியம்; கந்தமுடைமையாலென்பது. கந்தமுடை மைபக்கமாகு மெல்லாவற்றினுமில்லை; பிருதிவிமாத்திரத் திருத்தலின். அதனின் ஒருகூற்றிலே சொரூபாசித்தம்.

அப்படியேவிசேஷணாசித்தம், விசேஷியாசித்தம், அசமர்த்த விசேஷணாசித்தம், அசமர்த்த விசேஷியாசித்தம்முதலானவைசொரூபாசித்தபேதங்கள்

அவற்றுள் விசேஷணாசித்த மெங்ஙனம்? சத்தநித்தியம். திரவியமாய்ப் பரிசமில்லாமையுடைமையின் என்பது. இங்கே திரவியத்துவ விசிட்ட பரிசமில்லாமை யுடைமை யேது பரிசமில்லாமைமாத்திர மன்று. சத்தத்திற் றிரவியத்துவமு மில்லை; குணமாதலால் ஆதலால் விசேஷணாசித்தம்: திரவியத்துவமென்னும்விசேஷணமில்லாமையால். அதனோடு கூடிய பரிசமில்லாமையுமில்லை; விசே

ணத்தின்மையால் விசிட்டமு மில்லாமையால். எங்ஙனம்? புருடனுள்ளுந் தண்டமின்மையிற் றண்ட விசிட்ட புருடனிலனே. ஆதலாற் பரிச மில்லாமை யுடைத்தாயினும் விசிட்ட வத்பாவத்தாற் சொரூபாசித்தமாம்.

விசேஷியாசித்த மெங்ஙனம்? சத்த நித்தியம்; பரிசமின்மையாய்த் திரவியத்துவத்தை யுடைமையால் என்பது. ஈண்டும் விசிட்ட மேது; விசேஷியமில்லாமையால் விசிட்ட சொரூபமில்லை.

அசமர்த்த விசேஷணாசித்த மெங்ஙனம்? சத்த நித்தியம் குணத்துவமுடையதாய்க் காரணபாவத்தையுடைமையால் என்பது. இங்கே விசேஷணத்திற்குச் சிறிதுஞ் சாமர்த்தியமில்லை; விசேஷியமான காரணபாவத்திற்கே நித்தியத்துவத்தைச் சாதிக்க வலியுண்மையால். ஆதலா லசமர்த்தம் விசேஷணம்; சொரூபாசித்தமென்பது விசேஷணபாவத்தில் விசிட்டமின்மையால். அற்றாயின், விசேஷணமான குணத்துவஞ் சத்தத்திலிருக்கின்றதே எப்படி விசேஷணமில்லை? அஃதொக்கும்; குணத்துவமுண்மையே; ஆயினுமது விசேஷணமான ஸாத்தியத்தைத் தருதலென்னும் பயனுடையதுவே பெறுவுக்கு விசேஷணமாம்; குணத்துவம் பயனுடைத்தன்று — அசமர்த்தமென்று சொல்லப்பட்டதே

அசமர்த்த விசேஷியாசித்த மெப்படி? இதிலே முன்பின்னான பிரயோகம் சத்த நித்தியம்; அகாரணத்துவமுடையதாய்க் குணத்துவமுடைமையா

ல் என்பது. இங்கே விசேடண மாத்திரமே வியர்த்தியத்துவத்தைச் சாதித்தலின் வியாப்பியமுடையது. விசேஷிய மசமர்த்தம்; சொரூபாசித்தமென்பது, விசேஷியாபாவத்தால் விசிட்ட மின்மையால் விசிட்டமேதுவாய்க் கொண்டமையால். ஒழிந்தது முன்போல.

எங்கே வியாத்தி யறியப்படாதது வியாப்பியத்துவாசித்தம். அம் இருவ துவாசித்தங் கை; ஒன்று சாத்தியத்துடனே யுடனி கழ்ச்சிய தில்லாதது. மற்றொன்று சோபாதிக சாத்திய சம்பந்தமுடையது.

அவற்றுள் முதல தெங்ஙனம்? யாது சத்து அது கணிகம். எங்ஙனம்? சலதர படலம் விவாத பதமாகிய சப்தாதியுஞ் சத்து. இங்கே சப்தாதி பக்கம் கணிகத்துவஞ் சாத்தியம்; சத்துவ மேது. இவ்வேதுவுக்குக் கணிகத்துவத்தோடு வியாத்தி யிற் பிரமாணமில்லை.

இரண்டாவ தெங்ஙனம்? கருப்பத்திலிருக்கின்ற மைத்திரிதநயன் கரியன்; மைத்திரி மகன்மையால்; காணப்பட்ட மைத்திரி தநயர் கூட்டம்போல. இங்கே மைத்திரி மகன்மையாற் கருமை சாதிக்கப்படும். மைத்திரி மகன்மை கருமையிற் பிரயோசகமன்று. மற்றென்னெனிற் சாகாதி யாகார பரிணதியே பிரயோசகம். பிரயோசகமுபாதியென்று கூறப்படும் ஆதலால் மைத்திரி மகன்மைக்குக் கருமைச் சம்பந்தத்தில் சாகாதியாகாரப் பரிணாமமே யுபாதி அது வெங்ஙனம்? திக்குப் ப

கைச்சம்பந்தத்தில் ஈர விறகின் சம்யோகமுபாதி.
ஈண்டு உபாதி சம்பந்தத்தால் வியாத்தி யில்லையெ
யெனபது; மைத்திரி மகன்மையயா மென்னது மேது
வியாப்பியத்துவாசித்தம். யாகத்தூட்பட்ட கொலை
மை யதன்மசாதநம்; கொலைமையால்; யாகப்புற
த்துக் கொலைமை போல. ஈண்டுக் கொலைமை யத
ன்மசாதநத்தின்கட் பிரயோசகமன்று. மற்றென்
னை? நிஷித்தத்வமே யுபாதியென்பது. முன்போ
ல ஈண்டு முபாதியுண்மையாற் கொலைமை யேது,
வியாப்பியத்துவாசத்தம். அற்றாயின் சாதநாவி
யாபகமாய்ச் சாத்திய வியாபகமாயது யாதது வு
பாதியென்ப துபாதியிலக்கணம் அது நிஷித்தத்
வத்திலில்லை அங்ஙனம் உபாதி? இங்ஙா
மன்று, நிஷித்தத்வத்தி னுபாதியிலக்கணமுண்மை
யால் அங்ஙனமன்றோ, சாத்தியமான அதன்மசா
தநத்துவத்துக்கு வியாபக நிஷித்தத்வம். எங்கே
யெங்கே யதன்மசாதநத்துவமங்கேயங்கே நிஷித்
தத்வத்தி னிருப்புண்மையால்; எங்கே யெங்கே
கொலைமை யங்கேயங்கே நிஷித்தத்துவமவசியம
ன்று யாகத்திற் கங்கமான கொலையில் வியபிசார
த்தினால். யாகவங்கமான கொலையிற் கொலைமை
யுண்டு நிஷித்தத்வமில்லை

இப்படியே மூன்றசித்தங்களுங் காட்டப்பட்டன.

2 விருத்தம்.

சாத்தியத்தின் விபரீதத்தோடு வியாத்தமான
ஏது விருத்தம். எங்ஙனம்? சத்தம் நித்தியம், காரி
யத்துவத்தால் என்பது. இங்கே நித்தியத்துவமா

சாத்தியம்; அதனுடைய மாறுபாடான அநித்தியத்தைக் காரியத்துவ வியாக்கும் யாதொரு காரிய மஃது நித்தியமே.

ஆகலால், சாத்திய விபரீதத்தை வியாபித்தலால் காரியத்துவ ஏது விருத்தமாகும்.

௨. அநைகாந்திகம்

சம்சய ஏது அநைகாந்திகம்--- வியபிசாரத்தோடேகூடின ஏதுவநைகாந்திகமாம். அது சாதாரணம் அசாதாரணமென இருவகை. அவற்றுள் முதலாவது பக்ஷ சபக்ஷ விபக்ஷ விருத்தி; எங்ஙனம்? "சத்த நித்தியம், பிரமேயத்துவத்தால்" என்பது பிரமேயத்துவ ஏது பக்ஷமான சத்தத்தினுஞ் சபக்ஷமான நித்தியத்தினும் விபக்ஷமான அநித்தியத்தினு மிருக்கின்றது எல்லாம் பிரமேயமாதலால் இரண்டாவது சபக்ஷ விபக்ஷங்களினினில்லாதது; எங்ஙனம்? "நிலம் நித்தியம், கந்தமுடைமையால்" இங்கே கந்தமுடைமையேது, சபக்ஷமான நித்திய வியோமாதியினின்றும் விபக்ஷமான அநித்திய சலாதியினின்றும் நீங்கினது கந்தமுடைந்தும் பிருதிவிமாத்திரத்திருப்புண்மையால்.

உண்டாகிய சபக்ஷ விபக்ஷமுடைய வேதுவுக்குச் சபக்ஷத்திலிருந்து விபக்ஷத்தினீங்கமாய் நிற்கை லேசியமமாய்க், கமகாங்கத் தன்மையின்றாகி யமாபாவமே வியபிசாரம். அது இருவகையாற் கூடும் சபக்ஷ விபக்ஷத்தி லிருத்தலானும் அவற்றினில்லாமையானும்.

4. பிரகரணசமம்.

யாதுக்குப் பிரதிபட்சமான வேறுரு மேதுவுண்டதுவே பிரகரணசமம் சற்பிரதிபட்சமென்றுஞ் சொல்லப்படும். எங்ஙனம்? சத்தநித்தம்; அநித்திய தருமந் தோன்றுமையாலென்பது. இங்கே விபரிதார்த்தத்தைச் சாதியாநின்ற சமாநபலமாகிய வேறநுமாநம் பிரதிபட்சமென்று சொல்லப்படும். யாது துல்லியபலமன்றதுபிரதிபட்சமன்று அங்ஙனமன்றோ, விபரிதத்துக்குச் சாதகமான வநுமாநம்; உபசிவியம், உபசிவகம், அநுபயம் என மூவகையாம். அவற்றுண் முதலது வாதகம்; வலிமையையுடையதால். எங்ஙனம்? பரமாணுக்ளநித்தியம் மூர்த்தமாகையால்; கடம்போல பிரயாணத்தாற் கிரகிக்கப்படாத தருமியான பரமாணுக்களின் அநித்தியத்து வாநுமாநங் கூடாது; ஆசிரயாசித்தியால். இவ்வநுமாநத்தாற் பரமாணு கிரகிப்புக்குப் பிரமாணியமறியப்பட்டது; அன்றி யிதற்குத் தோற்றமேயில்லாமையால் ஆலால் உபசிவியம் வாதகமே. உபசிவகந் துற்பலமானதால் வாத்தியம். எங்ஙனம்? இந்த வநித்தியத்து வாதுமாநமே. மூன்றுவது சற்பிரதிபட்சம் துல்லியபலத்தால்.

5. காலாத்தியயாபதிட்டம்

எதற்குப் பிரத்தியட்சாதி பிரமாணத்தாற் பக்கத்திற் சாத்தியாபாவ பரிச்சினம், அதுகாலாத்தியயாபதிட்டம் பாதிதவிடயமென்றுஞ் சொல்

லப்படும் எங்ஙனம்? தீ வெம்மையில்லது பதார்த்தத்வத்தால்; சலம் போல. இங்கே பதார்த்தத்வம் ஏது. அதற்குச் சாத்தியம் வெம்மையில்லது, அதனுடைய அபாவங் காட்சியானே பரிச்சின்னம். துவக்கிந்திரியத்தாற் றீயினது வெம்மையில்லாம தள்ளப்படுகையால். இன்னுங் காலாத்தியயாபதிட் டெங்ஙனம்? கணிகத்துவஞ்சாதிக்கின்றபோது முன் சொன்ன சத்துவமேது. ஈங்கே கணிகத்துவம் சாத்திய மதனுடைய அபாவமாகிய அக்கணிகத்துவம் பிரத்தியபிஞானபிரத்தியட்சத்தினாலே பரிச்சின்னம் பாதிதன்றுன் முன்னமறியப்பட்டது, அதுவே யிக்கடமென்று பூருவ அநுபவத்தாற் சனித்த வாசனையோடு கூடிய விந்திரியத்தாற் பிறந்து பூருவாபர காலத்தை யடைந்த பிரத்தியபிஞானத்தாற் கடத்துக்கு நிலைமை துணியப்படும்

இந்த அசித்த முதலான அஞ்சு மேதுப்போலிகள்; பக்க தருமத்துவ முதலான ரூபஙிரத்துவத்தாலேதுவல்லன. தஞ் சாத்தியத்தைச் சாதியாதன விலக்கணமாகுங் கேவலவியதிரேகியினுடைய அதிவியாத்தி யவ்வியாத்தி யசம்பவங்களு மிவற்றடங்கும். இவ்வைந்தினு மதிகமல்ல.

அதிவியாத்திபுடையது வியாப்பியத்துவாசித்தம். விபக்கத்தினீக்கமில்லாமையால். சோபாதிகத்துவத்தாலும். எங்ஙனம்? கோவிலக்கணமான னும் பசுத்துவ நதுக்கு, அலைதாடி முதலான வுண்மை பிரயோசகம்

அவ்வியாத்திக்குப் பாகாசித்தம். எங்ஙனம்? கோவிலக்கணமென்னுஞ் சித்திர வன்னமான அலைதாடி. அசம்பவஞ் சொரூபாசித்தம்; கோவிலக்கணமான ஒரு குளம்புடைமை

௰௪. சலம்.

தாற்பரியம் வேறுபடச் சொல்லுஞ் சொல்லுக்குப் பொருள் வேறு கற்பித்துத் தூடணஞ் சொல்லுதல், சலம். எங்ஙனம்? நூதன தாற்பரியத்தாற் சொல்லப்பட்ட நவகம்பளமுடையானிம்மைந்தனென்னும் வாக்கியத்திற்கு வேறு பொருளாயாசங்கித்தொருவன், இவனுக்கு நவகம்பளங்களில்லை வறுமையால் இவனுக்கிரண்டாயினுமில்லை எங்ஙனமொன்பதென்று தூடியாநின்றான் இவ்வாறு சலவாதியாதலாற் றோற்றவன்.

௰௫. சாதி.

அசத்தான உத்தரஞ் சாதி—உற்கருஷசமான அபகருஷசமை முதலான பேதத்தாற் பலவகைப் பெருகுமென்னும் பயத்தாலெல்லாஞ் சொல்லப்பட்டனவல்ல. அவற்றுளவ்வியாத்தமான திட்டாந்த தருமத்தாற் சாத்திய அவ்வியாபகத் தருமத்தை வருவித்த லுற்கருஷசமையென்னுஞ் சாதி எங்ஙனம்? சத்தமநித்தியம் காரியத்துவத்தால்; கடம்போலவென்று சொல்லுதற்கண் ஒருவனிங்ஙனஞ் சொல்லாநின்றான், காரியத்துவஹேதுவாற் கடம்போலச் சத்தமநித்தியமாயின் அந்த ஹேதுவாலே அதுபோலவே சத்தஞ் சாவயவமா

கவேண்டுமெனை. அவ்வியாத்தமான திட்டாந்த தருமத்தால் அவ்வியாபகமாகு தருமத்தின் பாவத்தை வருவித்தல் அபகருஷசமையென்னுஞ் சாதி. எங்ஙனம்? முன்சொன்ன அநுமானத்தில் ஒருவன் இங்ஙனஞ் சொல்லாநின்றான், காரியத்துவவேதுவாற் கடம்போலச் சத்தம் அநித்தியமாயின் அந்த வேதுவாற் கடம்போலச் சத்தமுஞ் செவியாற் கவரப்படாததாகவேண்டும் கடஞ்செவியிற் கவர்வதன்றேயெனை.

௰௬. நிக்கிரகத்தானம்

தோல்விபோது நிக்கிரகத்தானம் அது நூநம், அதிகம், அபசித்தாந்தம், அர்த்தாந்தரம், அப்பிரதிபை, மதாநுஞ்ஞை, விரோதம் முதலாய பேதத்தாற் பலவிதமாயினும் பெருகுமென்று சொல்லப்பட்டனவல்ல. சொல்லவேண்டிய பொருளிற் சிறிது குறைதல் நூநம். சொல்லவேண்டியபொருளி னதிகம் அதிகம். சித்தாந்தத்தின் கேடு, அபசித்தாந்தம். பிரகிருதத்திற் சம்பந்தமான பொருளுடைய சொல் லர்த்தாந்தரம் உத்தரத்தினது தோன்றாமை அப்பிரதிபை. தனக்குப் பிரதிகூலமாய்ப் பரனுக்குச் சம்மதமான வார்த்தையைத் தானேயங்கீகரித்தல் மதாநுஞ்ஞை. இட்டார்த்தபங்கம் விரோதம். ஈண்டு மிகவும் வேண்டாமையாகிய ரூப பேதங்களுக்கிலக்கணங்கூறாமை குற்றமன்று.

தர்க்கபாஷை முற்றியது

தர்க்கபாஷையின்

அருமபதவிளக்கம

அசத்- இன்மை

அசமவாயி-சமவாயிகாரணமல்லாதது.

அசித்து சித்தியில்லாதது.

அட்டில்- அடுக்களை

அங்கு- இலக்கம்.

அதன்மசாதனம்- தருமமல்லாதசெயல்

அதிகரணம் - அநுமேயத்தோடு தொடர்ந்தது.

அதிதேசம்-ஒப்புமை காட்டியுணர்த்துதல்.

அதிப்பிரசங்கதோஷம் மிகைபடக் கூறலென்னுங் குற்றம்.

அதீந்திரியம் - இந்திரியத்திற்கெட்டாதது,இந்திரியத் த யதி ரமித்தது

அந்நுவயம்-உடன்பாடு இயைபு, பொருட்கியையச் சொற்களைச் சேர்த்தல்.

அந்விதம்-கூடி வருவது, தொடர்ந்துவருவது

அநவதணை- முடிவுபெறுமை

அநிச்சிதம் - நிச்சயிக்கபபடாதது

அநுகதம்-நிச்சயிக்கப்பட்டது.

அநுகூலம்-உறவானது.

அநுபயம் இரண்டற்றது.

அநுபலத்தி- உண்டென்னு ஞானத்தின் இன்மை, ஞானபாவம்

அநுமாபகம் அநுமேயத்தை யுணர்த்துவது அநுமிக்கப்பண்ணுவது, அறிவிப்பது.

அநுமானம்-கருதல்

அநுமிதி இலிங்கத்தின் பராமரிசத்தாற்றோன்றுமறிவு, கருதலறி /

அநுவிருத்தி தொடர்ச்சி, சேர்ந்திருத்தல்.

அநேகாநுகதம்- பல்வற்

றி னொருங்குசேறலையு
டையது
அநைகாந்திகம் பிறழ்வு
டையது நியமமில்லது
அப்பியத்துவம்-சிறுமை
கொஞ்சம்
அப்பிரதிமை தோற்ற
மை
அப்பிராமாண்யம்-அப்பி
ரமாத்துவம்.
அபதிட்டம்--மறுக்கப்ப
டுதல், பழி கப்படுதல்
அபரத்துவம்-பின் ம
அப ர்க்கம்-மோட்சம்
அபாகசம் பாகத்தாலு
ண்டாகாதது இயற்
க
அபிதேயம்-பெயரிட்டுவ
ழ கற்பாலது.
அபியுபகமம் மெய்யெ
றெத்துக்கொள்ளு
தல்.
அபிவியஞ்சகம் தெரிவி
த்த தோற்றுவித்த
ல், வெளிப்படுத்தல்
அயதார்த்தம்.பொய்
அவதார ம் நிச்சயித்த
ல்
அ திதம் டிக் ப்ப
டாதது

அவாதிதவி-யம் அநு
மானவாக்கியத்திற்சொ
ல்லப்படும் பஞ்சரூப
களுளொன்று அஃது
ஏதுவுக்கு விடயமான
சாத்தியதருமம் எப்பி
ரமாணத்தாலுங் கண்
டிக்கப்படாதிருத்தல்
அவாந்தரவியாபாரம்- இ
டைத்தொழில்
அவிசம்பாதம்- பிரமாண
த்தையநுசரித்தது
ஆ-பசு.
ஆசிரயம்- பற்றுக்கோ டு
இருப்பிடம், பக் ம்
ஆசிரயாசித்தம் சார்பசி
த்தம்
ஆலோகம் ஒளி
இந்திரியம் பொறி, ஆன்
மாவின டயாளம்
இ க் ணம்-சிறப்பியல்பு
அ டயாளம்
இலக்கியம் - இலக்கணமு
டயது
இலிங் ம் வியாத்தி வி
பால் ம றந்த பொரு
ளை உ ர்த்துவது வி
யாப்பியமா து.(குறி
சாதனம் ஏது என்ப
னபரியாயம்)

உபசிவகம் அணைந்திருப்பது
உபசிவியம்- அணைதல்
உபமிதி உபமாப் பிரமாணத்திஞல் வருமறிவு.
உபலப்தி அடைதல், அறிவு, புலனறிதல்
உபாதி-சாத்தியத்திற் சமவியாத்தியுடையதாய்ச் சாதநத்தில் வியாபகமில்லாதது, செயற்கையானது
உயர்சிறப்படதல்-வீடுதல்
உற்பூதவுருவப் பிரத்தியட்சமாய்க் காணப்பட்டவடிவம்.
ஏத்துவாபாசம் ஏதுப்போலி.
ஏத்வந்தரம் வேறேரேது
ஏது சமர்த்தப்பிரவிருத்திசந ம்- பயனுடைச் செலவைத் தோற்றுவித்தல் (ஏது- ாரணம் சமர்த்தம் கொடுத்தல் பிரவிருத்தி செவு சந ம்-தோற்றுவித் ல்)

ஒப்புத்திருஷ்டம்- ஒப்புமைகாண்டல்
ஔபாதிகம் உபாதியாலுண்டாயது.
டம்-குடம்
கணிகம் கணமாத்திரத்திலிருப்பது
தட்பமுகுளம்- டப்பமொட்டு
கபாலமாலா-ஓட்டின்ரிசை
மகம்-அடைவது, பெறுதி
ரணம் உயர்ந்த காரணம்
ாலாத்தியயம் இறந்தகாலம்
கிருத த்துவம்-செய்யப்படுகை.
சங்கியா-எண்
சங்கே தம் நியமம்
சத்து-உள்ளது
சத்துவம்-உ ம
சத்தை-உண்மை, உண்மைத் தன் மயாகிய சாதி
சந்நிகர்ஷம்-சம்பந்தம்
சமவாயம் ஒற்று ம, இயபு

சமவாயி- முதற்காரணம்
சமவேதம்-பிரியாமல், நீக்கமின்மை.
சமவேதித்தல்- நீக்கமின்றியிருத்தல், பிரியாதிருத்தல்
சமுசர்க்கம்-கலப்பு.
சலம்- ஒரு கருத்துப்பற்றிக்கூறிய மொழிக்கு வேறு பொருள்படைத்திட்டுக்கொண்டு பழித்தல்.
சவிகற்பம் - விகற்பமுளது
சற்பாவம்- [illegible]மை
சற்பிரதிபக்கம்-உள்ளவிரோதியுடையது
சாட்சாத்-பிரத்தியட்சம்
சாத்தியம்- முடிக்கப்படுவது.
சாதகதமம்-உயர்ந்த சாதகம்
சாதனம்-காரணம்
சாதநம் முடிப்பது
சாதியத்துவம்-சாதியின் சம்பந்தத்தன்மை
சாமாநியம் பொது
சான்மகம் - ஆன்மாவின் கூட்டமுடையது ஆன்மாவோடுகூடியது.
சிநேகம்-திரட்டுதல்
சுரோத்திரம்-காது
சுவார்த்தம்-தற்பொருட்டு.
சையுத்தம்- சையோகசம்பந்தத்தால்விருத்தியாயது
சையோகம்-புணர்ச்சி.
சொரூபம்-ஏது, இலக்கணம்
சொரூபாசித்தம்- ஏதுவசித்தம்
சோபாதிகதை உபாதியோடுகூடியதன்மை.
ஞாதத்வம்- அறியுந்தன்மை, அறியப்படுந் தன்மை.
ஞாததை-அறிகை, அறியப்படுகை
தத்துவஞானம் - மெய்ஞ்ஞானம்.
தருமம்-தொழில், தன்மை
தாடி-மாட்டின்கழுத்திற்புடைத்துத்தூங்குந்தசை.
தாதாத்மியம்-ஒற்றுமை
தாரை - இடையீடுபடாமை
திதித்தாபகம்-இருந்த

போலிருத்துதல்,-நிலை பெறுத்துதை
நவியம் மழு
நவீநம்-புதுமை
நிர்ஹிர த்தாநம் - தோல் நித்தாநம்
நிச்சிதம்-நிச்சயிக்கப்பட்டது
நிச்சிம்ரயசம்- மோட்சம்
நிஷித்தத்வம் - விலக்கப் படுந்தன் ம
நிஷேதம்-எதிர்மறை
நிர்ணயம்-நிச்சயம்.
நியதம்-நியதி, நியமம்.
நமித்திகம் நிமித்தத் தாலாயது
படலம்-கூட்டம்
பதம் பொருள்
பராமரிசம்-ஆராய்ச்சி
பரார்த்தம் பிறன்பொருட்டு.
பரிச்சிந்நம் - தள்ளப்படுவது
பரி தி-பரிணமம்
பரிணமம்-உருத்திரிதல்
பரிமாணம்-அளவு
பா சம் பாசத்தாலுண் டாயது, செயற்கை.
பாஷியகாரர்-உரைகாரர்
பாதிதம் தடு ப்பட்ட
து, மறுப்புடையது
பாரிமாண்டலியம்-மிகப் பெரிய அளவு
பிரசயம்-ஐது.
பிரசிதிலம்-மி ஐது.
பிரத்தியபிஞாநம்-குறி, தறிந்த ஞாநம், நே ரேயறிதல்
பிரதரிசநம்-காணுதல்
பிரதரிசித்தல்- ாண்பித் தல், சொல்லுதல்
பிரதிபாதித்தல் - சொல் லுதல்
பிரதியோகி-எதிர்ம ற
பிரதீதி-அறிவு.
பிரமம்-மயக்கம்
பிரமாணம்- அள வ அ ளவைக் கருவி
பிரமாதா-அளப்பவன்
பிரமாதுரு-பிரமாதா
பிரமேயம்-அளவையான ளக்கற்பாலது, அள கப்படுவது.
பிரமை- யதார்த், வநுப வம், அளத்தல்
பிரயுக்தம்- பிரயோகிக் ப்பட்டது, கூட்டப்ப ட்டது
பிரயோசகம் காரணம்
பிரவர்த்தித்தல் மேற்

செல்லுதல், முயலல்,
திர்மானித்தல்.
பிரவிருத்தி-செய் க, வ
ழக்கு, ந ட
பிராசிநம்-பழ ம.
பிராமாண்யம்- பிரம த்
துவம். பிர ாணத்த
மை, பிரமாணமு
டயது
பிராமாணி ம்- பிராமா
ணியம். (ண்யம்.
பிராமாணியம் - பிராமா
பூயத்துவம்: பெருமை
அதிகம்.
ம த்துவம்-பெருமை.
ஸ்மிரு தி-நினைவு.
மெய்-உடம்பு; வடிவம்.
யதார்த்தம்-மெய்மை, நி
ச்சயம். (குதி.
யோகம்-பொருத்தம் த
யோகி கார ணம.
ரஹிதம்-விடுதல்.
ர்ணித்தல்-விவரித்தல்.
வாத்தியம்- தள்ளத்தக்க
து
ாத ம்-பாதகம் தடை
விசி டம் விசேடணத்
தெ ாடுகூடியது.
விசேடணம்-வேறுபடுத்
துவது அடை. [மை

விடயதை- விஷயத்தன்
மை உடன்பாடு.
விபாதம்-வி ாதம்
விபு-வியாபகம்.
வியக்தி-வெளிப்படை.
வியதிரேகம் எதிர்மறை.
வியபதேசம்-பெயர்.
வியவகரித்தல் - சாதித்த
ல், நியாயஞ்சொல்லுதல்
விய பகாரம்-வழக்கம்.
வியபிசாரம்-பிறழ்வு; நிய
மமின்மை. (திருப்பது
வியாத்தம்-செறிவு, கலந்
வியாத்தி-சாதனத்துக்கு
ச் சாத்தியத்தோடுள்
ளதாகிய இயற்கைச் சம்
பந்தம் வியாப்பிய வி
யாபகங்களி னியற்
கைச்சம்பந்தம், வியா
பித்தல், செறிதல், உ
டனிகழ்ச்சி.
வியாப்யம்- வியாபிக்க
ப்படுவது, குறைந்தி
ருப்பது
வியாபகம்-வியாபிப்பது;
மிகுந்திருப்பது
வியாவிருத்தி-நீக் ம்
விவாதம்-தருக்க ம் ாத்
தல்வாதம்.
விளயபம்-தாமதம்